விளம்பர விகிதங்களுக்கு :
மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்
பெரியதெரு,
யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு எழுதுக.

# சத்தியவேத பாதுகாவலன்

சந்தா விபரம்
வருடசந்தா
இலங்கை ரூபா 5-50
வெளிநாடுகள் „ 6-50

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone : No. 300
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.
"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

85-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு ஆடி மாதம் 14-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 27-ம் இலக்கம்.

## கி. பி. 2000-ம் ஆண்டின் பாப்பானவருக்கு

1939-ம்ஆண்டு காலஞ்சென்ற 11-ம்பத்திநாதபாப்பானவர் 2000-ம்ஆண்டிலே தமதிடமாக வருகிற பாப்பானவரால் திறக்கப்படவேண்டுமென்று இரண்டு திராட்சரசப்போத்தல்களை விட்டுப்போயிருக்கின்ருர். இது செய்தி அவரின் முன்னுள்காரியதரிசியாய் இருந்தவரும், தற்போது ஒருகருதினுலுமான கொன்பலோனியறி ஆண்டவராலே எழுதப்பட்ட அவரது சீவிய சரித்திரம் ஒன்றில் வெளியாகியிருக்கிறது. 11-ம்பத்திநாதபாப்பானவர் மரணிப்பதற்கு இருமாதங்களின்முன் இரத்தாசயதாக்கம் ஏற்படலாயிற்று; மருந்துகளும், ஆலோசனைகளும். அன்பளிப்புகளும் உலகமுழுவதிலுமிருந்துவந்து வத்திக்கானில் குவியலாயின; இந்தஅன்பளிப்புகளில் குறைந்தபட்சம் ஐந்துவருடங்களுக்குமுற்பட்ட திராட்சரசப்போத்தலும் ஒன்ருகும்; இந்தஅன்பளிப்பைப்பற்றிப் பாப்பானவர்பேசியபோது, "ஒருஎண்ணம் நமக்குவந்திருக்கிறது; இரு திராட்சரசப் போத்தல்களை எடுத்து அத்துடன் "11-ம்பத்திநாதர் 2000-ம் வருடத்திலே தமதிடமாக வருகிறவருக்கு" என்று தெரிவிக்கும் சீட்டுஒன்றையும் சேர்த்துவைக்கும்படி கூறினுரென அவரின்முன்னுள் காரியதரிசியான இந்தக்கருதினுல்ஆண்டவர் தெரிவித்திருக்கின்ருர். அதனுல், இவைகளிலே கைவைக்க இன்னும்நாற்பது வருடங்கள் செல்லவேண்டும்.

## தேவ அழைத்தல்களின் தந்தை

ஆர்பாகுஸாஎன்ற தூரமான ஸ்பானியகிராமத்தில் தொண்டாற்றிவருகின்ற 83வயதுடைய வண. புறூனே லெசோன்சுவாமியார் தேவஅழைத்தல்களை வளர்த்துப்பரிபாலித்து இதுவரை780 குருமார், பிறதர்மார், கன்னியாஸ்திரிமாரைப் பிறப்பித்திருக்கின்ருர். தற்போதுஇவர் தென்னமெரிக்காவிலே குருமார்குறைவாயிருப்பதை நிவிர்த்திபண்ண உதவிசெய்யுமாறு அழைக்கப்பட்டிருக்கின்ருர்.

ஞானவொடுக்கங்கள் போதிப்பதும், நன்குஆயத்தஞ்செய்து போதனுவகுப்புகளை நடத்துவதும், பாவசங்கீர்த்தனத் தட்டிகளிலே மணிக்கணக்கில்அமர்ந்து ஞானவழிகாட்டுவதுமே தேவ அழைத்தல்கள்விஷயமாய்த் தாம் அடைந்துகொண்ட பேரனுகூலங்களுக்குக் காரணமென்று சுவாமியார்கூறுகின்ருர்.

தற்போது தென்னமெரிக்காவைச்சேர்ந்த சிலிநாட்டிலே தேவவார்த்தையானவர் சபையைச் சேர்ந்த வண. எட்மன்டோ நிக்லிற்ஸ் செக்சுவாமியார் இவருடையமுறைகளுடன் மற்ருெருமுறையையும் கையாண்டுவருகிருர். நகரிலே அதிகம்வறியவர்கள் வசிக்கும்பகுதிகளில் இளைஞர்களைச் சென்வின்சென்ற் டீ போல் சபையுடன்சேர்ந்து தருமதொண்டாற்றச் செய்வதிலிருந்து அவர்களிடையே தேவ அழைத்தல்களை விருத்திசெய்ய முயற்சிக்கின்ருர்.

இவ்விதம் இளைஞர்கள் தொண்டாற்றுகையில், எவ்வளவோ அதிகம் செய்யப்படவேண்டியிருக்

[தொடர்ச்சி 5-ம் பக்கம்]

## ஹங்கேரியும் கத்தோலிக்க ஆசிரியர்களும்

அடுத்தபாடசாலைவருட ஆரம்பத்துடன் ஹங்கேரியிலுள்ள சகலஆசிரியர்களும் கம்யூனிஸ்தர்களாய் இருக்கவேண்டும்; அன்றேல் ஆசிரியபதவியிலிருந்து நீக்கப்படுவார்களென்று ஹங்கேரியநாட்டின் கம்யூனிஸ்தஅரசாங்கம் மீண்டும்கட்டளைவிடுத்திருக்கிறது. அதாவது திவ்வியபூசைக்குச் சமூகமளிக்கின்ற—அன்றேல் கம்யூனிஸ்தகொள்கைக்கு இசைந்தமுறையிலே கண்டிப்பாய்நடந்துகொள்ளாமல் சொற்பொழிவுநிகழ்த்துகின்ற எந்த ஆசிரியரும் பதவிநீக்கம் செய்யப்பெற்று அவர்களிடமாகப் பூரணமாக உறுதியளிக்கும் கம்யூனிஸ்த ஆசிரியர்கள் நியமனஞ்செய்யப்பட வேண்டிவருமென்பதே இதன்அர்த்தமாகும். கல்விமந்திரிகாரியாலயம் விடுத்துள்ள இந்த அறிவித்தல் சென்றவருடம் விடுக்கப்பட்டது. இவ்வருடமும் அது திரும்பவிடுக்கப்பட்டு நிகழும் 1960-ம்ஆண்டு புரட்டாசிமாதம் 1-ந்திகதியிலிருந்து நடைமுறைக்கு வரவிருக்கின்றது. அப்போது ஹங்கேரியநாட்டின் சகலபாடசாலைகளிலும் முழுக்கம்யூனிஸ்தஆசிரியர்களே முடிவாக இருந்துவருவார்கள். சமயகல்வியை இந்தஒழுங்கு எவ்வளவாகப்பாதிக்குமென்று இப்போது சொல்லஇயலாது. ஆனுல்,இதுவரை சமயகல்வி ஆரம்பபாடசாலைகளில்மாத்திரம் கற்பிக்கப்பட்டுவந்தது. அதுவும்பாடசாலைநேரத்துக்குப்பின் பெற்ருர் எழுத்துமூலம் செய்துகொள்ளும் வேண்டுகோளின் பேரிலேயே கற்பிக்கப்பட்டுவரலாயிற்று.

## அர்ச். பாவிலுவானவர் கட்டுண்ட சங்கிலி

அர்ச். பாவிலுவானவர் சிறைவைக்கப்பட்டிருந்த காலத்திலே அவரைக்கட்டிவைத்திருந்த சங்கிலியானது அவர் மோல்த்தாதீவின்கரையடைந்த 19-ம்நூற்ருண்டுவிழாவை — அதாவது "பவுலின் ஆண்டு" விழாவை முன்னிட்டு அதற்குப் பாப்பரசரின் பிரதிநிதியாகச் செல்லும் கருதினுல்முவெஞ்ச்ஆண்டவரால் ரோமாபுரியிலிருந்து நிகழும்ஆடிமாதம்20-ம்திகதியன்று அங்கே கொண்டுசென்று பெரியஊர்வலமாக எடுத்துச்செல்லப்படவிருக்கிறது.

இந்தச்சங்கிலி ரோமாபுரியிலே மதில்களுக்குவெளியிலுள்ள அர்ச். பாவிலுவானவர் மகாதேவாலயத்தில் பூச்சியமாகவைத்துக் காப்பாற்றப்படுகிறது. ரோமாபுரியிலே கொண்டாடப்படவிருக்கும் பவுலின்ஆண்டிற்கு ஓர்முன்னுயத்தமாக இத்திருப்பண்டம் அங்குள்ள விசாரணைப், பங்குகளில் தற்போது சுற்றுப்பிரயாணஞ் செய்துவருகிறது. இரவலாக இதனைஅனுப்பிவைக்குமாறு மோல்த்தாவின் கொன்ஸிஅதிமேற்றிராணியார் செய்துகொண்ட மனுவின்பேரிலே அருளப்பபாப்பரசர் அங்கு இதனை அனுப்பிவைக்கச் சம்மதிக்கலாயினர்.

"அர்ச். பாவிலுவானவர் தீவு" என்னும் சிறப்புப்பெயர்தாங்கிய மோல்த்தாவிலே பவுலின்ஆண்டு விழாக் கொண்டாட்டம் நிகழும் ஆடிமாதம் 10-ந்திகதியாகிய சென்றஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியிருக்கிறது. இது அடுத்த 24-ந்திகதியன்று பாப்பரசரின் பிரதிநிதியால் நடந்தேறும் நூற்ருண்டுவருடமுடிவின் திருவைபவங்களோடும், பாப்பரசரால் மோல்த்தியமக்களுக்கு ஒலிபரப்பப்படும் வானெலிஆசிச்செய்தியோடும் பூர்த்தியாகும்.

## யூத பிரமுகரைப் பாப்பரசர் சந்மானிக்கின்ருர்

பிரித்தானியபாராளுமன்றத்திலே மான்செஸ்றரைச்சேர்ந்த ஆட்விக்தொகுதியின் தொழிற்கட்சி அங்கத்தவரானஆல்டர்மன் லெஸ்லி லெவர்அவர்கள் பரிசுத்த பாப்பரசரால் அர்ச். கிறிகோரியாரின் நைற்பட்டம் சங்மானிக்கப்பெற்றிருக்கின்ருர். இவர் ஒருயூதராவர். ஆனுல்,கடந்த முப்பதுஆண்டுகளாகப் பிரித்தானிய பாராளுமன்றத்திலும், அதற்குவெளியிலும் கத்தோலிக்க பாடசாலைகளுக்காக அதிகம் வெற்றிகரமாகப்போராடிவந்திருக்கிருர். அவர் எடுத்துக்கொண்ட பிரயாசைகளைப் பாராட்டுமுகமாகவே பாப்பரசின் இந்தமகிமைப்பட்டம் அவருக்குவழங்கப்படலாயிற்று.

## அகதிகளும் பிரித்தானிய கத்தோலிக்கரும்

சென்றவைகாசிமாதம் 31-ந்திகதியன்று முடிவடைந்துள்ள பிரித்தானியின் உலகஅகதிகள் வருடத்திலே அகதிகளுக்கென்று பிரித்தானியகத்தோலிக்கர் 2,07,000பவுண் உபகரித்திருக்கின்றனர். பிரித்தானிய கத்தோலிக்க பெண்மணிகள்சங்க கஷ்டநிவாரண அகதிகள்கம்மிற்றி அங்கத்தவர்கள் தங்களுடைய பங்குத்தானமாக 11,000 பவுண் வழங்கியிருக்கிருர்கள். இந்த நிதிக்கென்று இங்கிலாந்திலும், வேல்சிலுமுள்ள கோவில்களில் முதற் பெருந்தொகைப் பணமாய் 1,18,000 பவுண் சேரலாயிற்று. இதுதவிர, பல்வேறு கத்தோலிக்கஸ்தாபனங்களும், பாடசாலைகளும் பணம்உபகரித்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழுதை சொன்ன கதை

கழுதையும் கதைசொல்லுமா? இதென்னகதை நானும் பிறந்து வளர்ந்து இத்தனைநாளாகியும் கழுதை பேசியதாக—கதைசொன்னதாக ஒரு நாளும் கேள்விப்பட்டதில்லையே. பெரும்புதுமையாய் இருக்கிறதே.

என்ன தாங்கள்பஞ்சதந்திரம் படிக்கவில்லையா?

ஏன்படிக்கவில்லை! அந்தநாளில் அதிகம்நன்ருகப் படித்திருக்கிறேன்.

அப்படியானல் அதிலே சிங்கங்கள், எருதுகள், கழுதைகள், நரிகளெல்லாம் கதைத்திருக்க, கதைகள்சொல்லியிருக்க, கழுதைஒன்று கதைசொல்லப் போகிறதாம என்ருற்போல் தங்களுக்குப் பெரும் புதுமையாயிருக்கிறதே. கழுதையிலேயே க(ழு)தை இருப்பது தங்களுக்குத் தெரியாதா? ஆமாம், சரிதான். எங்கே அந்தக்கழுதை தன்னுடையகதையைச் சொல்லட்டும், கேட்டுப்பார்ப்போம்.

## கழுதை சொல்லுகின்றது

தச்சரான சூசையப்பருக்கு நான் சொந்தமானவன். அவருக்கு நான் மரங்கள் சுமந்துகொண்டுபோய்க் கொடுப்பதுவழக்கம். அவர்என்னிலே அதிகம்பட்சமாயிருந்தார். நானும் அவரில் மிகவும்அன்பாயிருந்தேன்.

ஒருமுறைநாங்கள் சந்தைப்பக்கம் சென்றபோது சனங்களெல்லாம் வழமையைவிட அதிகமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். ரோமைப்போர்வீரன்ஒருவன் செய்திஒன்று கொண்டு வந்திருந்தான். அவர்களில்சிலருக்கு அது சந்தோஷசெய்தியாயிருந்தது. ஏனையவர்களுக்கோ அது அவ்வாறிருக்கவில்லை. ஆனல்,எதைப்பற்றி அவர்கள்பேசிக்கொண்டிருந்தார்கள் என்பதை நான் விளங்கிக்கொள்ளவில்லை. தச்சரானசூசையப்பர் ஏதோ பெரியஅறிவித்தல்ஒன்று இருக்கக் கண்டு அருகில்சென்று அதனைவாசித்தார். ஆனல்,அவர்வாசித்தது அவருக்குப்பிடித்தமாகத் தோன்றவில்லை. அவர் வீட்டுக்குவந்ததும் அதைப்பற்றி மரியாயிடம்தெரிவித்தார்.

அவர்சொன்னர்: "ஒவ்வொருவரும் பெயர்பதிவுசெய்ய வேண்டுமென்று பெரியரோமைச்சக்கிரவர்த்தி ஆணையிட்டிருக்கிருர். ஒவ்வொருவரும் தனதுகுடும்பம்வசித்திருந்த சொந்த ஊருக்குப்போகவேண்டும். நாம் பெத்லகேமுக்குப் போகவேண்டும்."

மரியாயும், சூசையப்பரும் ஆயத்தமானர்கள். மரியம்மாளைப் பெத்லகேமுக்கு நான் கொண்டுசெல்லப் போகிறேனென அறிந்தபோது எவ்வளவோ பெருமையடைந்தேன். மிருதுவாயும், பதமையாயும் நடந்துசெல்வதில் எவ்வளவோ சாவதானமாயிருந்தேன்.

வீதியோ நீண்டதாயும், கஷ்டமானதாயும், களைப்பை உண்டுபண்ணுவதாயும் இருந்தது. நாம்வழியிலே அநேக சனங்களைச் சந்தித்தோம். சிலர் செல்வந்தராயும், சிலர்வறிஞராயும் இருந்தனர். ஆனல், அவர்களில் எவருமே மரியம்மாளையும், சூசையப்பரையும்போல அத்துணை நல்லவர்களும், பரிசுத்தமுள்ளவர்களுமாய் இருக்கவில்லை. வழிநீளம் சனங்கள் அவர்களிலே அன்புபாராட்டவில்லை. வீதியின் அதிகம்நல்லபகுதியையே அவர்கள்நாடினர்கள். சூசையப்பர் பொறுமையாயிருந்தார். மரியம்மாள் பிரயாணத்திலே அதிகமானநேரம் செபஞ்செய்துகொண்டிருக்கக் காணப்பட்டாள். குளிரத்தொடங்கிவிட்டது. நாம் பெத்லகேம்போய்ச் சேர்ந்தபோது சூரியன் அஸ்தமித்துக்கொண்டிருந்தது. எமதுபிரயாணத்தின் முடிவுக்கு நாம்வந்துவிட்டோம் என்பதையிட்டு நான்சந்தோஷப்பட்டேன். மரியம்மாள் அதிகம் களைகொண்டவளாய்க் காணப்பட்டாள். சூசையப்பர் சொல்லிக்கொண்டார்: "நாம் தங்கக்கூடிய ஓர் இடத்தை விரைவிலே கண்டுகொள்ளவேண்டும்."

பாவம், சூசையப்பர்! முதலில்நாம் பெரியசத்திரத்திற்குச் சென்ருேம். ஆனல்,மரியம்மாளுக்கும், சூசையப்பருக்கும் அதிலே இடம்கிடைக்கவில்லை. ஏற்கனவேஅதில் மிகஅதிகமானசனங்கள் இருந்தார்கள். சூசையப்பர் வீடுவீடாகச்சென்ருர். ஆனல்,சனங்கள் மூர்க்ககுணமும், சுயநலமுடையவர்களாயும் இருந்தார்கள். ஒருவருமே சூசையப்பருக்கும், மரியம்மாளுக்கும் ஓர் இடம் கொடுக்கவில்லை.

இருள் சூழ்ந்துகொண்டது. பனி பெய்துகொண்டிருக்கிறது. சூசையப்பர் எனதுபக்கம் வந்தார். அவர் கண்களிலிருந்து கண்ணீர்ஓடக்கண்டேன். பரிதாபமாயிருந்தது.

அவர்சொன்னர்: "எங்களை எவருமே வீட்டில்ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நாங்கள்போகக்கூடியதாய் ஒரேயொருஇடந்தான் இருக்கிறது. அது அதிகம்உசிதமானதல்ல. ஆனல், வெளியிலே குளிரில்நிற்பதைவிட அதில் போய்த் தங்குவது அதிகம் நன்று".

அதன்மேல்அவர் எனதுகழுத்தில் கட்டியிருந்த கயிற்றைப்பிடித்து அந்தச் சிறிய பட்டினத்துக்குவெளியே என்னை நடத்திச்சென்ருர். ஒருசிறிய குகையைப் போய்ச்சேருகிறவரையில் ஒரு தெருநீளம் நடந்துசென்ருேம். சூசையப்பர் அங்கே என்னைநிற்பாட்டினர். பின்பு மரியம்மாள் என்னை விட்டுக் கீழேயிறங்குவதற்கு உதவி செய்தார். இருவரும் அந்தச்சிறிய குகைக்குள் சென்றனர். சூசையப்பர் திரும்பவும்விரைவாகவந்து என்னையும் உள்ளேஅழைத்துச்சென்ருர்.

அது ஒருவிதமாட்டுக்கொட்டிலைப் போல இருக்கக்கண்டேன். அதன் சுவர்கள் கல்லால்அமைந்திருந்தன. அவைகள் ஈரமாயிருந்தன. குகையின் தளம் வெளியிலுள்ள நிலத்தைப்போன்றிருந்தது. அங்கு சிறியதோர் மாட்டுத்தொட்டில்இருந்தது. அந்தத்தொட்டிலில் கொஞ்சம்வைக்கோல் இருந்தது. குகையின்மூலைஒன்றில் சுத்தமான ஒரு வைக்கோற்குவியல் இருந்தது. அவர் என்னை அங்கே நான்கண்ட ஒருபெரிய எருதுடன் இளைப்பாறும்படி விட்டுச் சென்ருர் இம்... இப்போது எனக்குமே களையாயிருக்கிறது. அதனல், சற்றே உறங்கிவிட்டு மீதியை மறுமுறை சொல்வேன்.

# உலக சஞ்சாரம்

## காப்பிரியரான பாப்புமாரும் எப்போதாவது இருந்தனரா?

இதுவிஷயமாய் நிச்சயமாக எதுவும் சொல்வது கஷ்டமாகும். ஆபிரிக்க பெற்ருேரைக் கொண்டவர்களாய் மூன்றுபாப்புமார் இருக்கின்ருர்கள். ஆனல், அவர்களின் சாதியைப்பற்றித் தெரிவிக்க யாதாமோர் ஆதாரமுமில்லை. அர்ச். விக்றர் பாப்பானவர் (189–199), அர்ச். மெல்கியாடெஸ் பாப்பானவர் (311–314), முதலாவது அர்ச். ஜெலாசியஸ் பாப்பானவர் (492–496)என்பவர்களே அம்மூவருமாவர். இவர்களிலே முந்திய இருவரும் ஆபிரிக்காவில் பிறந்தவர்கள். கடைசியானவர் ரோமாபுரியில் பிறந்தார். ஆனல், இவரின்பெற்ருேர் ஆபிரிக்கரே. ஆயினும் இவர்கள் வடஆபிரிக்காவிலுள்ள கார்த்தேஜ்நகருக்குச் சமீபமாகக் குடியேறிய ரோமர்களின் சந்ததியினராய் இருந்திருக்கலாம். சிலவேளை இவர்கள் பிறப்பிலே காப்பிரியராகவும் இருந்திருக்கலாம்.

## சிறைக் கைதிகளை மனந்திருப்பிய கைதிகள்

ஆபிரிக்காவைச் சேர்ந்த சூடான் நாட்டிலே சிறைச்சாலைஒன்றில் சிறைவாசஞ்செய்துவரும் காப்பிரியர்களான கைதிகளிலே கடந்த இருவருடங்களிலும் 500 பேருக்கு மேற்பட்டவர்கள் மனந்திரும்பிக் கத்தோலிக்கராகியிருக்கின்ருர்கள். இற்றைக்கு ஐந்து வருடங்களின்முன் தென்சூடானில் நடந்தேறிய படைக்கலகத்தில் கலந்துகொண்டதற்காக இவர்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தார்கள். விசாரணையில் ஏறக்குறைய 4,000 தென்சூடானியர்கள் 4முதல் 15வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்கள். இவர்கள் மத்தியிலிருந்த அநேகம் கத்தோலிக்கரே தங்களுடன் சிறைவாசஞ்செய்த அஞ்ஞானிகளுக்கும், புரொட்டஸ்தாந்தருக்கும் வேதசத்தியங்களைப் படிப்பித்தார்கள். கருங்கடலின் கரையிலுள்ள சுவாக்கின் சிறைச்சாலையில் கடந்த இருவருடங்களிலும் 200பேருக்கு மேற்பட்ட அஞ்ஞானிகள் ஞானஸ்நானம் அருளப்பட்டிருக்கின்ருர்கள். எப்போதாவது ஒரு குருவானவர் இந்தச்சிறைச்சாலையைத் தரிசிக்கும்போது அது ஒருபாரிய கோவிலாக மாறிவிடுகின்றது.

## அர்ச். பிரான்சீஸ் சவேரியார் பிறந்த அரண்மனை

1506-ம் ஆண்டு அர்ச். பிரான்சிஸ் சவேரியார் பிறந்த அரண்மனை திரும்பவும் கட்டப்படவிருக்கிறது. ஸ்பானிய தேச பம்புலோனுவுக்குச் சமீபமாகவுள்ள சவேரியார் பட்டினம் 1456-ம் ஆண்டு அழிக்கப்படலாயிற்று. சவேரியார் பிறந்த அரண்மனை அப்பட்டினத்தால் சூழப்பட்டிருந்தது. நவார் பட்டினசபை இந்த அரண்மனையைத் திரும்பக் கட்டுவதற்கென 2,50,000 பவுண்வரையிலே செலவிடவிருக்கின்றது. இந்தக் கட்டட திட்டத்திலே உல்லாசப்பிரயாணிகளின் விடுதிகளும், கார்ப்பாக்கங்களும் அடங்கியிருக்கும்.

## மிஷன்களுக்குப் பிள்ளைகளின் நன்கொடைகள்

சுதந்திரஉலகத்தைச்சேர்ந்த பிள்ளைகள் சென்ற 1959-ம் ஆண்டிலே மிஷன்கள் எனப்படும் புதுவேத நாடுகளுக்குப் 15 லட்சம் பவுணுக்குமேல் உபகரித்திருக்கின்ருர்கள். இந்தப் புள்ளிவிபரமானது பாப்பரசரின் திருப்பாலத்துவசபைப் பிரதமசங்கம் சமீபத்திலே பரீஸ்நகரில் கூடியபோது அதன் தலைவரான மொண்சிஞ்ஞோர் ஏ. பிறெசொல்லெஸ் சுவாமியாரால் வெளியிடப்படலாயிற்று. இங்கிலாந்திலும், வேல்சிலுமுள்ளபிள்ளைகள் சென்றவருடம் உபகரித்த பணம் முந்தியவருடத்திலும் 2,000 பவுணல் அதிகரித்து 26,350 பவுணுயிற்று.

## யாக்கோபு, ஆபிரகாமின் பட்டினம்

யாக்கோபுவும், ஆபிரகாமும் வசித்திருந்ததாகச் சொல்லப்படுவதும், 3,700 வருடங்களுக்குமுற்பட்ட பழமையான பெயிற்ஈல்என்ற கனனித்திய பட்டினத்தின் இடிகரையென்று நம்பப்படுவதுமானபகுதியை ஜோர்தான்நாட்டிலுள்ள அமெரிக்க புதைபொருளாராய்ச்சியாளர் அகழ்ந்து வெளியாக்கியிருக்கின்றனர். பிற்ஸ்பேக் சர்வகலாசாலையைச்சேர்ந்த டக்றர்ஜேம்ஸ் கெல்சோ, கார்னேஜி நூதனபொருட்காட்சிச் சாலையைச்சேர்ந்த டக்றர் ஜேம்ஸ் கொக்னர்என்ற அமெரிக்கர்இருவரும் ஜெருசலேம்நகருக்குவடக்கே 12மைல் தூரத்திலுள்ள றம்மல்லாபகுதியில் பூமியை அகழ்ந்தபோது இதனைக் கண்டுபிடித்தார்கள்.

## 60,000 பிள்ளைகளின் அவலநிலை

செஞ்சீனுவின் பக்கமாகவுள்ள பிரித்தானிய குடியேற்றதலமாகிய ஹொங்கோங்தீவானது சீனுவிலிருந்து கரையேறும் சீனர்களால் அணைகடந்து தேங்கிப்போயிருக்கிறது. அங்குசுமார் அறுபதினயிரம்பிள்ளைகள் வீதிகளில் அலைந்தவண்ணமிருப்பதாய் அங்குள்ள சிறுவர்-சிறுமியர் கிளப்புகள் சங்கத்தின் தலைவரான வண. பி. ஜே. ஹொவாட்சன் சுவாமியார் தெரிவிக்கின்ருர். இவர்களுக்குப் பாடசாலைகள் தானுமில்லை. இவர்களெல்லாம் அங்குள்ள வறியகுடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இந்தக்குடும்பங்கள் அங்குமக்கள் மிதமிஞ்சிநெருக்கமாகச் சஞ்சரிக்கின்ற வீடுகளின் இடைவெளிகளிலும், படிக்கட்டுகளின்கீழுள்ள ஒதுக்கிடங்களிலும் குன்றுகளில்அமைத்த கூடாரங்களிலும் வசித்துவருகின்ருர்கள்.

## சினிமாஇராணியின் அமைதியான வாழ்க்கை

லண்டன்நகரிலே கால்டர்வெல்ஸ் என்ற லட்சாதிபரின் நாடக்அரங்கிலே 12,500 பவுண மாதச்சம்பளம் பெற்றுவந்த 29வயதுடையலெயன் பீப்பிள்ட் என்ற ஆஸ்திறேலிய சினிமாஇராணி தனது கோலாகலவாழ்க்கையை உதறித்தள்ளிவிட்டுச் சென்றமாதம் நியூகினியாவின் கொப்பருத்தோட்ட முதலாளிஒருவரை மணஞ்செய்திருக்கின்ருள். தற்போதுஇருவரும் அதே தோட்டத்திலுள்ள குடிசைஒன்றிலே அமைதியானவாழ்க்கை நடத்துகின்றனர். குபேரசம்பத்திலும், உலகஆடம்பரத்திலும் நான் முன்னர்காணுதஅமைதி இப்பொழுது என்உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறதுஎன்று இவள் அங்கு தன்னைக்காணவந்த பத்திரிகைநிருபர்களிடம் தெரிவித்திருக்கின்ருள்.

## பாப்பரசர் சந்தித்த இராசியதூதுவர்

பரிசுத்தஸ்தானத்தினிடமாகப் பிரித்தானிய அரசாங்கத்தின் இராசியதூதுவராய் இருந்துவந்த சேர் மாக்குஸ் செகிஅவர்கள் ரோமைநகரிலுள்ள ஆஸ்பத்திரிஒன்றிலே சென்றமாதம் அபாயகரமான நோய்கண்டு வருந்தியபோது அருளப்பபாப்பரசர்சென்று அவரைச் சந்தித்து அவரின்படுக்கையண்டை 15 நிமிஷநேரம் செலவிட்டிருந்தார். 53 வயதுடையவரான இந்தஇராசியதூதுவர் பிந்தக் காலஞ்சென்றபோது இவரின்பூதவுடல் அங்கிருந்து விசேஷ ஆகாயவிமானம்ஒன்றிலே இங்கிலாந்துக்குக் கொண்டுசென்று பிறிமத்நகருக்குச்சமீபமான பிக்லீஎனுமிடத்தில் அடக்கஞ்செய்யப்படலாயிற்று. சேர் மாக்குஸ் செகிஅவர்கள் ஒருகத்தோலிக்கர்அல்லர். ஆனல், காலஞ்சென்ற 12-ம்பத்திநாத பாப்பானவரினதும், அநேக கருதினல்மாரினதும் பெரிய நண்பராக விளங்கியிருந்தார்.

* * *

● ஜெருசலேமின் பழையநகரிலே ஒலிவேத்துமலையின்மேல் கிறீஸ்துநாதரின் பாரிய திருச்சுரூபம் ஒன்றை அமைப்பதற்கு அனுமதி கேட்டு ஓர் அமெரிக்க சிற்பியாகிய திரு. அவாட் பெயர்பாங்ஸ் என்பவர் செய்தவேண்டுகோளை ஜோர்தான்நாட்டு அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறது.

● நியூயோர்க்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் ஸ்பெல்மன் ஆண்டவர் சமீபத்திலே 28 வயதுடைய தமது மருகருக்குக் குருப்பட்டம்அருளித் தம்முடைய 71-வது பிறந்த பெருநாளைக் கொண்டாடினர். அவருடைய மருகரான புதியகுரவர் வண. ஜோண் பெக்னம் சுவாமியாரே. இவர் அவருடைய சகோதரியின் ஏழுபிள்ளைகளில் ஒருவர். கருதினல் ஸ்பெல்மண் ஆண்டவர் 1916-ம் ஆண்டு குருப்பட்டம் பெற்றபின் அவருடைய குடும்பத்திலே குருத்துவ அந்தஸ்தில் பிரவேசித்த முதலாம்ஆள் இந்தப் புதிய குரவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையை வளப்படுத்திய செபமாலை

(வண. டெனிஸ் துலாட்ரி, S. D. B. சுவாமியார்எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்)

(முன் தொடர்ச்சி)

**அந்நாட்களிலே சர்வேசுரன் ஏன் அத்துணைபெரும் பாக்கியத்தை எனக்கு அருளச் சித்தமானார்என்பதைச் சிந்தித்து இன்னமுமேநான் ஆச்சரியவசத்தனாகின்றேன். குருத்துவஅழைத்தலை எனக்குக்கொண்டுவந்ததுஎன்ன? நான் குருப்பட்டம் பெறுமுன் எனதுபெற்ருரும், சகோதரியும் மனந்திரும்பிக் கத்தோலிக்கராகும்படி செய்ததுஎன்ன? ஆம், அந்தஜாக்ஸன்கிழவனார் கற்றுக்கொடுத்த பிரியதத்தமந்திரமே. ஆம், அந்தப்புனித மந்திரமே.**

எனக்கு ஒருசெபமாலை தரவேண்டுமென்று கல்லூரிஅதிபர்சுவாமிகளை நான்பணிவாகவேண்டினேன். அவரும் எனதுவேண்டுகோளுக்கு இசைந்து ஓர் அழகானசெபமாலை எனக்குத் தந்தது மாத்திரமல்ல, அதைச்சொல்லும்வகையையும் எனக்குச்சொல்லிக் கொடுத்தார். அதைக்கொண்டு அப்போது வீட்டிலே எங்களைவந்தடைந்த ஜாக்ஸன்கிழவனார் கற்றுக்கொடுத்த பிரியதத்தமந்திரத்தை விடாதுசொல்வதில் பெரிதுமேஇன்பங்கண்டேன்.

அவ்வாறாக ஒருநாள் எனதுஉள்ளத்திலெழுந்த உணர்ச்சிவேகத்தால் உந்தப்பெற்று நான் கத்தோலிக்கசமயத்தில் சேரவேண்டுமெனத் தீர்மானித்தேன். உடனேதானே வீட்டுக்கு ஒரு கடிதம்வரைந்து நான் ஒருகத்தோலிக்கனாக அனுமதியளிக்குமாறு என் தாயாரையும், தந்தையாரையும் வேண்டிநின்றேன். இந்தஅனுமதி இலகுவிலே எனக்குக்கிட்டலாயிற்று. ஏனெனில், எனதுதந்தையார் பிறருடையசமயவிஷயங்களிலே தலையிடாத ஒருமனிதர். அதனால் நான் ஒருகத்தோலிக்கனானேன். எனதுமுதல் நன்மைத்தினமன்று அன்றொருநாள் பிரியதத்தமந்திரம்சொல்ல எனக்குக் கற்றுக்கொடுத்த அந்தஜாக்ஸன் கிழவனார் ஒருவித மாப்பிள்ளைத்தோழர்கோலமாய் உடைதரித்து, எனதுவாழ்க்கையில் முதன்முறையாக என் ஆண்டவரை நான்பெற்றுக்கொண்டபோது சமூகமாயிருந்தார். அஃதுஉள்ளபடியே மனப்பாக்கியம்நிறைந்த ஒருமகத்தான தினமாயிருந்தது. ஆம்,அன்று தினமும்நான் பிரியதத்தமந்திரத்தை அதிக மதிகம்சொல்ல ஆசித்தேன், இல்லை, அதிகமாகச்சொன்னேன். எத்தனை தரம் அதைச்சொன்னேன் என்பது என்னால்ஒருபோதுமே கணிக்கவியலாது.

நான்படித்துவந்த உயர்தரகல்விச்சாலையில் இப்போது என்னுடைய கடைசிவருடம் அதுவாகும். எனது உடன்மாணவர்களில் அநேகர் தங்கள் எதிர்காலத்தைப்பற்றிச் சம்பாஷித்துக்கொண்டு வந்தார்கள். அவர்களிலே பீற்றர் டொயில் ஆகாயப்படையில் சேருவதற்கு ஆயத்தப்பட்டுக்கொண்டிருந்தார். அவர் ஒருசிறந்த ஹொக்கி விளையாட்டு வீரருமாவர். ஜேக்கப் ஓ' நெயில் எம். ஏ. என்ற கலாநிதிப்பட்டம் பெற்றுக்கொள்ளுமாறு ஒரு கல்லூரிக்குச்செல்லத்தயாராகிக்கொண்டிருந்தார். தோமஸ் யோசெவ் வைத்தியபட்டம் பெறுவதற்காக அரசாங்க வைத்தியகல்லூரிஒன்றில் சேர்வதற்கான ஆயத்தமெல்லாம் செய்துகொண்டிருந்தார். ரோனி பேர்ரர்டோ குருமடத்தில்சேர்ந்து ஒருகுருவாக வரவேண்டுமென்று சதாசிந்தித்து அதற்கானஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார். ஆம்,நானும் ஒரு குருவாக வரவேண்டுமென ஆசித்தேன். ஆனால், புரொட்டஸ்தாந்த குடும்பம்ஒன்றில்பிறந்து, பதின்மூன்று வருடகாலம் ஒருபுரொட்டஸ்தாந்த கிறீஸ்தவனாக வளர்க்கப்பட்டுவந்தநான் ஒருகுருவாகி, மற்றோர்கிறீஸ்துவாக வரமுடியுமா? என்றுநெடுநாள் ஆலோசித்துக்கொண்டு இருந்துவிட்டுக் கடைசியாக மாகாணஅதிசிரேஷ்ட சுவாமியாருக்கு மன்றாட்டமாக ஒருகடிதம்எழுதினேன். அதன்விளைவாக நான் குருமடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டேன்.

குருமடத்திலே எனதுவாழ்க்கை மனப்பாக்கியமுள்ளதாய் இருந்தது. அங்கேஎனக்கு அதிகமானசங்கடங்களும், கஷ்டங்களும், சந்தேகங்களும் உண்டாயின. அப்போதெல்லாம் பிரியதத்தமந்திரத்தைக்கொண்டு அவைகளைவெற்றிகொள்ளுவேன். குருமடத்திலே எனதுவேதசாஸ்திரபடிப்பின் ஈறுந்தவருடத்தில் என்தாயாரும், தந்தையாரும், சல்லிஅக்காவும் ஏறுமன்கத்தோலிக்கராக ஞானஸ்நானம்அருளப்பெற்று, எனதுமுதற்பூசையில் எல்லோருமே சமூகமாயிருந்தார்கள். அந்நாட்களிலே சர்வேசுரன் ஏன் அத்துணை பெரும்பாக்கியத்தை எனக்குஅருளச் சித்தமானார்என்பதைச் சிந்தித்து இன்னமும்நான் ஆச்சரியவசத்தனாகின்றேன். ஆம், ஜாக்ஸன் அப்பாவுமே சமூகமாயிருந்து என்முதற்பூசைமுடிந்ததும் எனதுஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும்படி வந்தார். அதன்மேல நாமெல்லாம் தேவஅன்னையின் திருச்சுரூபத்தின் முன்பாக ஒருங்கே பிரியத்தமந்திரம் சொல்லி அத்திருத்தாயாரது அணைகடந்தஅன்பின் வெள்ளத்திலே எமது இருதயங்களைத் திளைக்கச்செய்தோம்.

இப்போதுநான் அந்திமயங்கும் மாலைப்பொழுதிலே கோவில்சென்று, நற்கருணைப்பேழைமுன்பாகவுள்ள விளக்கின் தணிவானபிரகாசத்தின் பக்கமாகவிருந்து செபமாலைசொல்லிவருகிறேன். சயனிக்கப்போகுமுன்னும், சயனத்தின்பின்னும், சந்தர்ப்பங்கிடைக்கும் போதெல்லாம் மாலைமாலையாகச் செபமாலைசொல்லிக் குவிக்கிறேன். பிரியதத்தமந்திரத்தைச் சொல்வதில்நான் பேருவகை எய்துகின்றேன். என்ன ஒருபெரும் அழகான செபம்இது! ஜாக்ஸன்அப்பா அதை எனக்குக் கற்றுக்கொடுத்ததுபோல் உலகில் தனது முதல்துன்பதுயருடன் ஒருசிறுபிள்ளை என்னிடம்வந்தபோதுஅதற்குஅதைக் கற்றுக்கொடுத்திருக்கிறேன். வாழ்க்கைப்போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற தங்கள்புதல்வர்களுக்காகத் தாய்மார் சொல்லிவரும்படியாய் அவர்களுக்கும் அதைக்கற்றுக்கொடுத்திருக்கிறேன். தங்கள் வாழ்க்கையின் அந்தியகாலத்திலே தள்ளாடித் தளர்நடைபோட்டு என்னிடம்வந்த வயோதிகர்களுக்கும் தங்கள் சீவியபாரத்தையும், துன்பதுயரத்தையும், இன்பத்தையும் அன்னைமரியின் அடிகளில் வைக்கும்படியாய்ப் புத்திசொல்லி அவர்களுக்கும் அந்தப்புனித மந்திரத்தைக் கற்றுக்கொடுத் திருக்கிறேன்!'

அர்ச். தொன்பொஸ்கோ பிரியதத்தமந்திரம்சொல்லிக்கொண்டுதான் தமது பாரியதொண்டுகளைத் தொடக்கினார். பிரியதத்தமந்திரத்தை அடிக்கடி சொல்லிவந்ததுதான் எத்தனையோகுருமாரின் தேவஅழைத்தலுக்கு ஏதுவாயிருந்தது. உங்களுடைய அழைத்தலுக்கும் அதுவே காரணமாயிருந்தாலோ! சுபம்.

# ரோமாபுரியின் ஏழு அதிசயங்கள்

(திரு. லோட்ரி லேன் அவர்களது கட்டுரையின் தமிழாக்கம்)

(முன்தொடர்ச்சி)

லத்தறன்அருளப்பர் மகாதேவாலயம், லத்தருனியென்ற புராதன குடும்பம்ஒன்றின் நாமத்திலிருந்து தனதுபெயரைச் சூடிக்கொள்ளலாயிற்று. இந்தஆலயத்தின்பக்கமாக அந்தக்குடும்பம் ஒருஅலங்காரமாளிகையைத் தனக்குச் சொந்தமாகக் கொண்டிருந்தது. கொன்ஸ்ரன்ரின்சக்கிரவர்த்தி இந்தமாளிகையைப் பாப்புமாருக்கு அன்பளிப்புச்செய்தார். ஏறக்குறைய ஆயிரம்வருடங்களாக இந்தமாளிகையே அவர்களின்வாசஸ்தலமாய் இருந்துவந்தது. ஆரம்பகாலத்திலிருந்த கட்டடங்களின் குழுவில் ஒன்றேயொன்றாய் அங்குஎஞ்சியிருப்பது. ஆலயத்தையும், மாளிகையையும் அடுத்துள்ள ஞானஸ்நானத் தொட்டியே.

பழைமைவாய்ந்த தனதுமாதிரியிலே இந்தத்தொட்டியின் கட்டுக்கோப்பானது பிந்தஅமைக்கப்பட்ட ஞானஸ்நானத்தொட்டிகளுக்கெல்லாம் அநேக நூற்றாண்டுகளாக ஒருமாதிரிரூபமாய் இருந்துவரலாயிற்று.

இந்தஆலயம் ஆரம்பகால ஞாபகசின்னங்களாய் ஒருசிலவற்றையே இன்று கொண்டிருக்கின்றது. தற்போதைய அழகியதோற்றத்திலே சம்பிரமுற்றுத் திகழும் இதன்முகப்பானது 18-ம்நூற்றாண்டிலே அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயமுகப்பின் மிதமான ஒரு மாதிரியிலே அமைக்கப்படலாயிற்று.

1823-ம்ஆண்டு மதில்களுக்கு வெளியேயுள்ள அர்ச். பாவிலுவானவர் மகாதேவாலயத்தின் மிகப்பெரும்பகுதி அக்கினியால் அழிக்கப்படுமுன் இதுதான் ரோமாபுரியிலுள்ள ஆலயங்களிலெல்லாம் மகாஅலங்காரமுள்ளதாய் இருந்துவந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. அத்தீவிபத்தில் இதன் ஒருசில பொருட்களே தீயின்வாய்ப்படாது எஞ்சியிருந்தன. இவற்றில் பாஸ்காத்திரி எரிக்கப்படும் மெழுகுவர்த்தித்தண்டுதான் மகாவிசேஷப்பட்டதொன்றாகும்.

சந்தாக்குரோஸ், அர்ச். செபஸ்தியார், அர்ச். லோறெஞ்சியார் மகாதேவாலயங்கள் அடிக்கடி திரும்பத்திரும்பக் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றன. கடைசியான அர்ச். லோறெஞ்சியாரின் ஆலயம் இரண்டாவது உலகயுத்தம் நிகழ்ந்தகாலத்திலே தற்செயலாகக் குண்டுவீசப்பட்டதிலிருந்தும், 12-ம் பத்திநாதபாப்பானவர் அந்தச்சணமே விரைந்துசென்று அங்குசமூகமளித்து இறங்குந்தருவாயில் இருந்தவர்களுக்கும், தங்கள்உறவினரை இறக்கக்கொடுத்த இனபந்துக்களுக்கும் ஆறுதல்கூறியதிலிருந்தும், அங்குசனங்கள் மத்தியில் சோகமேஉருவாய்நின்று அவர்களுடன்சேர்ந்து செபஞ்செய்ததிலிருந்தும் என்றைக்கும் நினைவுகூரப்படக்கூடியதொன்றாயிற்று.

இறுதியாக ஈண்டு குறிப்பிடப்படும் அர்ச். மேரிமஜோர் மகாதேவாலயம் மனதைக்கவருவதான சரித்திரசம்பவத்தைக் கொண்டுள்ளது. இது லிபேரியஸ்பாப்பானவரின் காலத்திலே ரோமைநகர்வாசிஒருவரின் உதாரணகுணத்தைக்கொண்டு, நடுக்கோடைகாலத்திலே ஒருசிலுவைமாதிரியாய் உறைபனி பெய்திருந்தஇடத்திலே கட்டியெழுப்பப்பட்டது. முந்த அர்ச். பனிமய மரியநாயகிஆலயமென அழைக்கப்பெற்றுவந்த இதன் நாமம் 13-ம்நூற்றாண்டிலே பரிசுத்தநாட்டிலிருந்து ரோமாபுரிகொண்டுசென்ற திருக்குடிலாகிய திருப்பண்டம் பூசிதமாகவைக்கப்பட்டகாரணமாகத் திருக்குடில் மரியநாயகிஆலயமென மாற்றப்படலாயிற்று.

நித்தியநகரிலே பரிசுத்ததேவதாயாருக்கு அர்ப்பணஞ்செய்யப்பெற்றுள்ள 80ஆலயங்களிலும் மிகப்பாரியதும், மகாமுக்கியத்துவம் வாய்ந்ததுமான இந்தஆலயம் பிற்பட்டகாலத்தில் அர்ச்.மேரிமஜோர்என அறியப்படலாயிற்று. புனிதவருடம் ஒன்றில்மாத்திரம் திறக்கப்படுகின்ற "போட்ரா சாந்தா" எனப்படும் புனிதகபாடங்களைக் கொண்டுள்ளனவாய் ரோமாபுரியிலுள்ள நான்குமகாதேவாலயங்களில் இதுவும்ஒன்றாகும். இந்தஆலயத்திலே அழகுக்கழகுசெய்தவாறாய்க் காலந்தோறும் அநேகமாற்றங்கள் செய்யப்பட்டும், நவமாகப் பலசேர்க்கப்பட்டும் வந்திருக்கின்றன. இதன் விசிராமத்திலே 5-ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட சித்திரத்தளங்களுடன் மத்தியகால சித்திரத்தளங்களும் சேர்த்துச் சிறப்பிக்கப்பட்டுத் தேசோமயமாய்க் காட்சியளிக்கின்றன.

1500வருடங்களுக்குமேற்பட்டப் புனிதமாக்கப்பட்டுவந்துள்ள இந்தஏழு மகாதேவாலயங்களையும் தரிசிப்பதையும், அவற்றின்சேத்திரங்களில் செபஞ்செய்வதையும், அவற்றில்நடந்தேறும் மாபெரும் திருவைபவங்களில் கலந்துகொள்வதையும் ரோமாபுரிசெல்லும் யாத்திரிகர்கள் ஒவ்வொருவருமே தங்களுக்குக்கிடைத்த பெரும்பேறாகக் கருதிக்கொள்ளுகின்றார்கள்.

---

● இங்கிலாந்து ஒரு தீவாயிருந்தபோதிலும் அது 3,000 மைல்நீளமான ஆறுகளையும்,கால்வாய்களையும் கொண்டிருக்கிறது. லண்டன் நகரபகுதியில் மாத்திரம் 8,000 மைலுக்குமேற்பட்ட நீளமான தெருக்கள் இருக்கின்றன.

● திவ்வியயேசுவின் விலைமதித்தற்கரிய திருஇரத்தத்துக்குத் தோத்திரமும், மகிமையுமாகப் புதியபிரார்த்தனைஒன்று ரோமான் பூசைப்புத்தகத்திலே திருஇருதயப் பிரார்த்தனையை அடுத்துச் சென்றஆனிமாதம் இடம் பெற்றிருக்கிறது. இது லத்தீனிலே சென்ற ஆனிமாதம் 2-ந் திகதியன்று "ஐக்ரா அப்போஸ்தலிக்கே சேதிஸ்" என்ற சஞ்சிகையில் வெளிவந்துள்ளது. இது பாப்பரசரினதும், திருச்சடங்காசார திருச்சங்கத்தினதும் முத்திரையைக் கொண்டிருக்கிறது.

● அருளப்ப பாப்பரசர் அன்று செவ்வாய்க்கிழமை ஒருபெரிய பூகோளஉருண்டையை அன்பளிப்பாகப்பெற்றபோது; உடனேதானே அதில் தாம் பிறந்த இடத்தைக் கூர்ந்து பார்க்கலாயினர். இந்தப் பூகோள உருண்டை உலகிலுள்ள 2,200மேற்றிராசனங்கள், அதிமேற்றிராசனங்களின்எல்லைகளை வகுத்துக்காட்டுகின்றது. இது தேவவார்த்தையானவர்சபைக் குருமாராலே பாப்பரசருக்கு அன்பளிப்புச் செய்யப்படலாயிற்று.

● ஆஸ்திரியாவில் கேர்ச்பேக் பட்டினத்தில் பாரம்பரியமான தேவநற்கருணைச் சுற்றுப்பிரகாரம் அன்று நடைபெற்றபோது அதன் பங்குக்குருவர் வழமைபோல ஒரு குதிரைமீது சற்பிரசாதகதிர்ப்பாத்திரத்தை ஏந்தியபடியே அமர்ந்து அப்பட்டினத்துக்கு வெளியே மலைப்புறத்திலுள்ள ஒரு சிற்றாலயத்திற்குக் கொண்டுசென்றார். அங்குதான் பல நூற்றாண்டுகளுக்குமுன் படையெடுத்துவந்த சேனைகள் திவ்விய சற்பிரசாதநாதரின் அருளால் அப்போதிருந்த குருவானவரால் தடுத்துநிறுத்தப்படலாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

### ஆடி — 1960

ஞா. 17 பெந்தக்கோஸ் தின் பின் 6-ம் ஞாயிறு (அர்ச். அலேசியார் ஞா.) (வி. ம.) (ப)
திங். 18 அர்ச். கமிலப்பர் (அர்ச். சிம்போரேசம்மாள் அவள் எழு மக்கள் ஞா.) (வெ)
செ. 19 அர்ச்.பவுல் வின்சேந்தியார் (வெ)
புத. 20 அர்ச். எமிலியார் (அர்ச். மார்கரீத்தம்மாள் ஞாபகம்) (வெ)
வி. 21 அர்ச். பிறின்டிசிலவுறேஞ்சியார் (அர்ச். பிராக்சீத்தம்மாள் ஞா.) (வி. ம.) (வெ)
வெ. 22 மரிய மதலேனம்மாள் (வெ)
சனி. 23 அர்ச் அப்பொல்லினார் (அர்ச். லிபோரியார் ஞா.) (சி)


சத்திய வேத

# பாதுகாவலன்

1960-ம் ஆண்டு
ஆடிமாதம் 14-ந் திகதி


## பொதுத்தேர்தலும் வாக்காளர் கடமையும்

இலங்கைப் புதியபாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்கு இன்னும் ஒருவாரம்மாத்திரமே இருக்கின்றது. வாக்காளர்கள் சென்றபங்குனிமாதம் 19-ந்திகதியன்று நடந்தேறிய பொதுத்தேர்தலில் பெற்றஅனுபவத்தைக் கொண்டும், கடந்தஇருமாதங்களாக நிகழ்ந்துள்ள சம்பவங்களைக் கருத்திற்கொண்டும், தாங்கள் கண்டவைகள், கேட்டவைகளைக்கொண்டும், பத்திரிகைகள், மற்றும்பிரசுரங்களில் படித்தவைகளைக்கொண்டும் தங்கள் வாக்குரிமையை வழங்கும்விஷயமாய்த் தீர்க்காலோசனை செய்ய வேண்டும். பொதுத்தேர்தலில் யார்யாரை அங்கத்தவர்களாகத் தெரிவுசெய்ய வேண்டுமென்று சிந்திக்கவேண்டிய ஒருசூழ்நிலையில் இன்றுநாம் இருந்துவருகின்றோமென்பதைத் திட்டமாக உணரவேண்டும். இன்றைய உலகில் ஒருமனிதனுக்குள்ள விலைமதித்தற்கரிய மகத்தான உரிமைகளில் வாக்குரிமையும் ஒன்று. ஏனெனில், அது ஜனநாயகத்தின் ஆணிவேராய் விளங்குகின்றது. இந்தஉரிமையைத் தக்கவாறு பயன்படுத்துவதில்தான் மக்களின் எதிர்காலவாழ்வும், தாழ்வும் தங்கியிருக்கின்றன. ஆகவே, பொதுத்தேர்தலில் வாக்களிக்கும் உரிமைபெற்றவர்கள் கடவுள்பற்று உடையவர்களா? சுயநலங்கருதாது உழைக்கக்கூடியவர்களா? கண்ணியம், சேவை, கடமை, நேர்மைமுதலாம் சற்குணசீலங்களை உடையவர்களா? என்பதைக்கண்டறிந்து உண்மையிலேயே உழைக்கக் கூடியவர்களைத்தான் தெரிவு செய்யவேண்டும்.

நிகழும்ஆடிமாதம் 20-ந்திகதியன்று நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தல் இந்நாட்டின் சரித்திரத்திலே மிகவும்முக்கியமானது. அதனால் கத்தோலிக்க வாக்காளர் இந்நாட்டின் பிரசைகளென்றமட்டிலே தங்கள்சொந்த உரிமைகளுக்காக மாத்திரமல்ல, சகலமக்களினதும் உரிமைகளுக்காக—சமூக, பொருளாதார, ஆத்மீகவாழ்க்கையை விருத்தி செய்வதென்ற சீரியஇலட்சியத்தைக்கொண்ட ஓர்அரசாங்கம் அமைக்கப்படும்படியாகத் தங்கள் வாக்குரிமையைத் தக்கவாறுபயன்படுத்தவும், ஒத்துழைக்கவும் கடமைப்பட்டிருக்கின்றனர். வாக்குரிமை புனிதமானது. அதனால் எல்லோரும் அதனைப் பெரிதும்கவனமாகப் பரிசிலனைசெய்தே பிரயோகிக்க வேண்டும். அதனை விவேகசாதுரியமாகப் பிரயோகித்தால் நாடு வாழும். ஆகவே, பொதுத்தேர்தல் சம்பந்தமாய் நம்மேற்றிராணியாண்டவர்அவர்கள் எடுத்துக் கூறியவைகளை மீண்டும்ஓர்தரம் ஞாபகப்படுத்துவது நலமாகும். எவ்விதஅசௌகரியத்தையோ, பணச்செலவையோ, பிரயாண கஷ்டத்தையோ பறுவாய்பண்ணாது எல்லோருமே வாக்குரிமை வழங்கப் போகவேண்டும். அங்ஙனம்போய் வாக்குரிமை வழங்கவேண்டும். தேவகற்பனைகளின்படி நடக்கக்கூடியவர்களும், நாம் அருமையாகமதிக்கின்ற திருச்சபைக்கும், எமது செல்வநாட்டிற்கும், எமதுகுடும்பத்திற்கும், எமதுபிள்ளைகளுக்கும் நீதியானகாரியங்களைச் செய்யக்கூடியவர்களுமான அபேட்சகர்களுக்கே—எமதுமனச்சாட்சிச் சுதந்திரத்தை அனுபவித்து ஏனையஉடன்மனிதருடன் சமாதானமாய், சந்தோஷமாய்வாழ உதவியாயிருக்கக்கூடிய அபேட்சகர்களுக்கே எமதுவாக்குரிமையை வழங்கவேண்டும். எமதுநாட்டிற்கு இயன்றமட்டும் அதிகம் சிறந்த ஓர்அரசாங்கத்தைக் கண்டடையுமாறு எம்மால்இயன்றதெல்லாம் செய்யவேண்டும். ஆண்டகைஅவர்கள் கூறியுள்ள ஆலோசனைகளின்படிகத்தோலிக்க வாக்காளர்கள் நடந்து கொள்வார்களெனஎதிர்பார்க்கின்றோம்.

நிற்க, ஆட்டுத்தோலைப்போர்த்த ஓநாய்கள்போன்று சூழ்ச்சிசெய்துகொண்டு அதிகாரத்தைக்கைப்பற்ற முனைந்துநிற்கும் மாக்ஸீயவாதிகள்மட்டிலே வாக்காளரெல்லாம் மிகுந்தவிழிப்பாய் இருக்க வேண்டும். அன்றேல் மற்றோர் தீபேத்தியசம்பவம் — மற்றோர் ஹங்கேரியசம்பவம் நிச்சயமாக இங்கும் நிகழ்ந்தேதீரும். இலங்கையிலே கம்யூனிஸ்தபுரட்சியை எவ்விதம்நடத்தவேண்டும் என்பதுபற்றிச் செய்யப்பட்டிருந்த சதித்திட்டம் இப்போது அம்பலமாகிவிட்டது. சமசமாஜகட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றுடன் ஒருஐக்கியமுன்னணியை அமைப்பதே இந்தச்சதித்திட்டத்தின் முதல்படியாகும். எவ்வாறுபுரட்சியை நடத்த வேண்டும்? எவ்விதம்அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டும்? என்று கம்யூனிஸ்தர்கள் ஏலவே சதித்திட்டம் வகுத்துவிட்டார்கள். நெடுங்காலமாக ஒருவருக்கொருவர் பரமவிரோதிகளாய் இருந்துவந்த கம்யூனிஸ்தகட்சியினரும், சமசமாஜகட்சியினரும் இன்று உடன்பிறந்தவர்கள்போல் உறவுகொண்டாடத் தொடங்கிவிட்டனர். அடுத்தபடியாக இந்த மாக்ஸீயவாதிகளின் ஆதரவில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம்ஒன்று அமைக்கப்படவேண்டியதுதான். பின்பு இவர்கள் ஆட்டிவைத்து அரசாங்கத்தைக் கவிழ்க்கவேண்டியதுதான். அதன்மேல் மறுநாடுகளில் நடத்தியதிருவிளையாடல்களை நடத்த வேண்டியதுதான். அப்போது என்னநிகழும்? இலங்கைமக்கள் அரிதேபெற்றநாட்டின் சுதந்திரம் பறிபோகும். அதைத்தொடர்ந்து அவர்களின் சகலசுதந்திரங்களும் சூறையாடப்படும். ஐரோப்பாவிலென்ன, ஆசியாவிலென்ன, கம்யூனிஸ்தர்கள் அடிப்படுத்தி இரும்புத்திரையும், மூங்கில்திரையும் போட்டுமறைத்துவைத்துள்ள நாடுகளிலெல்லாம் மக்கள் சகலசுதந்திரங்களையும் இழந்து அடிமைகளாகித் தாங்கமுடியாத கஷ்டநஷ்டங்களுக்குள்ளாய் நெட்டுயிர்த்து, நிலைதளர்ந்து, கெட்டார்தழையாரோ, கேடொருகால் நீங்காதோ வென்று கண்ணீரும்கம்பலையுமாய் உயிர்வாழ்வது உலகம்நன்கறிந்ததே. சென்றபொதுத்தேர்தலிலே தமிழ்ப்பேசும்மக்கள்மாக்ஸீயவாதிகளான சமசமாஜ, கம்யூனிஸ்தஅபேட்சகர்களைக் கைகழுவிக் கட்டுப்பணமும்கிடையாமல் செய்துவிட்டார்கள். இந்தப்பொதுத்தேர்தலிலும் அவர்கள் விரட்டிவிடப்படுவார்களென்பதில் சந்தேகமில்லை. தென்னிலங்கையிலும் அவர்கள் முந்தியதேர்தலில்போன்று ஆதரிப்பாரின்றிக்கை நெகிழப்படுவார்களாயின் கம்யூனிஸத்தின் கோரரூபத்தை அங்குள்ளவாக்காளர்களும் நன்குணர்ந்துள்ளார்களென்றே நிச்சயமாகக்கொள்ளலாம்.



சதாசகாயமாதா கோணம்

## என் தாய் என் நம்பிக்கை

லூர்துபதியில்நடைபெறும் புதுமைகளைப்பற்றி நாம் எல்லோரும் கேள்விப்பட்டிருக்கிறோம். நாம்அடுத்தடுத்து அவற்றைப்பற்றிக் கேள்விப்படுவதால் அவைகள் அசாதாரணமானவையாக நமக்குத்தோற்றுவதில்லை. பழகப்பழகப் பாலும்புளிக்குமென்பார்கள். அந்தப்புதுமைகளின் காத்திரத்தை, கனகனத்தை, அபூர்வத்தன்மையைப் பற்றி நாம்சற்றேனுஞ் சிந்திக்கிறோமில்லை.

லூர்துபதியில் குணமடைந்த ஒருவரின் மனோநிலையை, உணர்ச்சிகளை நாம்எப்போதாவது சிந்தித்ததுண்டா? ஒருகுருவானவருக்கு ஒருமனிதன் இவைகளைப்பற்றி விபரித்ததைக் கேளுங்கள். பதினொருவருடங்களாகத் தாங்கொணுவேதனைப்பட்டு, இடதுதோள், முள்ளந்தண்டு, குண்டிக்காய், சுவாசப்பைமுதலியன கசரோகத்தால் தாக்குண்டு அவதிப்பட்டவன் லூர்துபதிக்குச் சென்றான். அங்கே குளிர்ந்த சலத்தில் அவனைத் தோய்த்தெடுத்தார்கள். அம்மட்டுந்தான். ஐந்துவினாடிகள் சென்றிருக்கக்கூடும். கசரோகமே என்னவென்று அறியாதவன்போன்று பூரணசௌக்கியம் பெற்றான்.

அந்தநேரத்தில் அவனுடைய மனோபாவம் எப்படியிருந்திருக்கும்? நோய் நிவாரணமா? ஆனந்தமா? நன்றியா? இவையல்ல. இவற்றிலும்பார்க்க ஆழ்ந்ததும், காத்திரமுமான உணர்ச்சிப்பிரவாகம் அவனிடம்ததும்பியது. அது என்னவெனில், "இந்தப்பூவுலகில் தான் இருப்பது தேவதாயாருக்கு நன்கு தெரியும். தன்உபத்திரவத்தை அவ பூரணமாக அறிந்திருக்கிறு. ஆதலினால் தனக்காகஆண்டவரிடத்தில் பரிந்துபேசி, ஏதோவிதமாக இயற்கைக்குமேலான சக்திகளை ஏவி, தான் மூச்சுவிடும்சுவாசாசயத்தையும், தான் படுத்திருக்கும் முதுகையும், தான் ஆட்டிஅசைத்த தோள்ப்புசங்களையும் தாவிப்பிடித்து உடனுக்குடனே தானே பரிபூரணசுகத்தைத் தந்தருளச்சித்தமாயினு" என்பதே.

இந்தஎண்ணம் — இந்தநற்சிந்தனை அவனுடையவாழ்க்கையை முற்ருக மாற்றவும், தன் நாளாந்த கடமைகளைச் செவ்வனேசெய்யவும், யேசுவுக்கும், தேவதாயாருக்கும் உகப்பாயிருக்கவும் உதவியாகவிருந்தது.

இந்தச்சுகிர்தசிந்தனை எங்கள்சீவியங்களையும் நல்வழிப்படுத்தத் தூண்ட வேண்டும். நாம் லூர்துபதிக்குப் போகமுடியாதவர்களாயிருக்கலாம். தேவதாயார் நமக்குத் தேகசுகம் கிடைக்கப் பிரத்தியேகபுதுமை செய்யாதிருக்கலாம். ஆனால், லூர்துபதிக்குச் சென்றமனிதன் கூறியதுபோலத் தேவதாயார் எங்கள்ஒவ்வொருவரையும் நன்குஅறிவா. எங்கள்சீவியத்தின் நடபடிகளிலும் சொந்தக்கரிசனை எடுக்கிறு. இதுநிச்சயம். அவவை இரந்து மன்றாடினால், தேவனுடையவரப்பிரசாதத்தின் வல்லபம் எங்கள்ஆத்துமங்களில் தனதுநல்லவேலையைச் செய்யாமலிருக்கமுடியாது. எங்கள்பலவீனத்தைப் போக்கவும், எங்கள்புத்தியை மேம்படுத்தவும், மனோதிடனைவளர்க்கவும், ஆன்மநோயைத்தீர்க்கவும் உதவியாயிருக்கும். இதைப்பற்றி நாம் சந்தேகப்படாது நிச்சயமாக விருப்பதற்குரிய நியாயம்என்ன? என்னவென்றால், தேவதாய் எங்கள்தாய்.

திருச்சபையின் சரித்திரத்தில் முன்னொருபோதும் இல்லாதவகையில் தேவதாயாரின்பாதுகாப்பு இன்று நமக்குத் தேவைப்படுகிறது. ஏனெனில், தமதுதிருக்குமாரனால் இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களை நாசமாக்கத் திருச்சபையின்விரோதிகள் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

எங்கள்தற்காலஉலகம் பாவச்சேறு நிறைந்த படுகுழியாகத் தோற்றமளிக்கிறது. இந்தக்குழியிலிருந்து நாமும், கணக்கற்றஏனையோரும் தப்பிக்கொள்ள ஒரேயொருவழி தேவதாயாரின் மாசில்லாதஇருதயப் பத்தியேயாகும்.

தேவதாயாரின் இரக்கமுள்ள இருதயத்தின் தன்மையைக்காட்ட ஒருசிறு கதை நினைவுக்குவருகிறது. அதின் உண்மை, பொய் ஒருபுறம்இருக்கட்டும். அதின்குரூரத்தையும் சட்டை பண்ணவேண்டாம்.

"ஒருவாலிபன் கெட்டதோழரோடு சேர்ந்து பெரும்அக்கிரமியானான். அவன் எந்தத்துட்டசெயலுக்கும் பின்வாங்கமாட்டானென்பதை ருசுப்படுத்தவேண்டியிருந்தமையால், அவன் தன்தாயைக் கொல்லவேண்டும் என்றும், அவளின் இருதயத்தை வெட்டிஎடுத்துத் தன்தோழர்களுக்குக் கொண்டுவந்து காட்டவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டான். அவன் தயங்காதுசென்று தன்தாயைக் கொன்றான். இருதயத்தை வெட்டி எடுத்து ஒருசீலைத்துண்டில் கட்டினான். தோழர்கள் காத்திருந்த குகையை நோக்கிநடந்தான். பாதைகரடுமுரடாயிருந்தமையால் காலிடறிக்கீழேவிழுந்தான். விழும்போது அவன்வைத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

### விசேஷ பொலிஸ்காவல்

"யக்கவ்லெவ் திரும்பிப்போ," "டட்லியே, யக்கவ்லெவைத் திருப்பி அனுப்புக" — "மற்றொரு தீபேத்திய சம்பவம் இங்கு நிகழவேண்டாம்" என்ற சுலோகங்கள் வரையப்பட்டிருந்ததைத் தொடர்ந்து கொழும்பிலே பின்னர் வீதியிலுள் ளருஷியஸ்தானிகராலயத்திற்கு வெளியே விசேஷ பொலிஸ்காவல் வைக்கப்பட்டிருக்கிறது.

### சிங்களத்திற்போல் தமிழிலும்

பாராளுமன்றத்திலே சனப்பிரதிநிதிகள்சபையின் நிரந்தரவிதிகள் ஏற்கனவே சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இப்போது இந்தவிதிகளைத் தமிழிலே மொழிபெயர்க்கும்வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பொதுத்தேர்தல்முடிந்து புதியபாராளுமன்றம் கூடுவதற்குமுன் இந்த வேலையைச் செய்துமுடிக்க உத்தேசித்திருப்பதாகத் தெரியவருகிறது.

### முதலாவது தேர்தல் முடிபு

ஆடி மாதம் 20-ந் திகதியன்று பகல் பொதுத்தேர்தல் முடிவடைந்ததும் அன்றிரவு 8-30 மணிக்கு முதலாவது தேர்தல் முடிபு அறிவிக்கப்படுமென்று தேர்தல் கம்மிஷனர் தெரிவித்திருக்கின்றார். மறுநாள் 21-ந் திகதி வியாழக்கிழமை காலை சகல முடிபுகளும் வெளியாகிவிடும். வாக்கெடுப்பு முடிவடைந்து ஒருமணி நேரத்தின்பின் வாக்குகளை எண்ணிக் கணக்கெடுப்பது ஆரம்பமாகும். பொதுத்தேர்தல் சம்பந்தமாய் 36 லட்சம் மாதிரி வாக்குச்சீட்டுகள் அரசாங்கத்தால் வாக்காளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

### டக்றர்மாரின் தட்டுப்பாடு

தற்போது இலங்கையில் எல்லாமாக 2,100 டக்றர்மார் இருக்கின்றனர். இவர்களில் 1,124 பேர் அரசாங்க சேவையிலும், 600 பேர் தனிப்பட்ட சேவையிலும் அமர்ந்திருக்கின்றனர். ஏனையோர் வைத்திய சேவை செய்வதில்லை. இலங்கையிலே தற்போது அரசாங்க வைத்திய சேவையில் ஏற்பட்டிருக்கும் டக்றர்மாரின் மிகமோசமான தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்காக அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறிய அல்லது விலகிய டக்றர்மாரை மீண்டும் சேவையில் அமர்த்துவதுபற்றிச் சுகாதார மந்திரி காரியாலயம் ஆலோசித்து வருகிறது. கூடிய விரைவிலே இவர்களில் 50 டக்றர்மாராவது திரும்பவும் வைத்திய சேவையில் சேர்க்கப்படுவார்களெனத் தெரியவருகிறது.

---

ருந்த அத்தாயின் இருதயமும் ஒரு கல்லின்மேல் விழுந்தது அவன் விழுந்த நோவையும் கவனியாது எழும்பும்போது, அந்த இருதயம் கனிந்தகுரலில் **"மகனே, உனக்கு ஏதும்காயம் ஏற்பட்டதா?"** என்றுகேட்டது அவன்காதிற்பட்டது.

இக்கதையிலிருந்து நாம்படிக்க வேண்டிய பாடம்என்னவென்றால், தேவனுடையவும், அவர் தம்திருத்தாயாருடையவும் இரக்கத்தின் மட்டில் நாம் அவநம்பிக்கை கொள்ளக்கூடாது. அவர்களுக்கு விரோதமாய் நாம்கட்டிக்கொண்டபாவங்கள் அநேகமாயிருக்கலாம். மோசமானவைகளாயிருக்கலாம். மனிதசமுகத்தில் அருவருக்கத்தக்கவைகளாயிருக்கலாம். ஆனால், நாம் நம்பிக்கைஇழக்க வேண்டியதில்லை. ஏனெனில், தேவதாயாரின் இரக்கமுள்ளபாதுகாப்பு எங்களுக்கு உதவிசெய்யும். "என் தாய், என் நம்பிக்கை" எனும் மனவல்லயச்செபத்தை ஒருநாளைக்கு எத்தனைதரம் சொல்லக்கூடுமோ அத்தனைதரம் சொல்லுவோமாக.

### வெளிநாட்டுக் கையிருப்புப் பணம்

இலங்கையின் வெளிநாட்டுக் கையிருப்புப் பணம் சென்ற வைகாசியில் 2 கோடியே 60 லட்சம் ரூபாவால் குறைந்துள்ளது. இவ்வருடத்தின் முதல் ஐந்து மாகாணங்களிலும் வெளிநாட்டுக் கையிருப்புப் பணம் 7 கோடியே 64 இலட்சம் ரூபாவால் குறைந்து சென்ற வைகாசி மாதக் கடைசியிலே கையிருப்புப் பணத்தின மொத்தத் தொகை 61 கோடியே 40 லட்சம் ரூபாவாயிற்று.

### கொடித்தகராறில் இருவர்கொலை

காலியைச்சேர்ந்த கனெகொடை எனும் கிராமத்தில் சென்ற 6-ந்திகதி புதன்கிழமைஇரவு கொடித்தகராறு காரணமாக இருகொலைகள் நடந்துள்ளன. இரண்டுமரங்களில் தேர்தல் கொடி பறக்கவிடப் பட்டதிலிருந்தே இந்தக்கொலைகள் நிகழலாயின. கே. ரி. நந்தியாஸ் அப்புஹாமி, கே. கே. மாட்டீன் அப்புஹாமி என்பவர்களே கொலையுண்ட இருவருமாவர். இக்கொலைகள் சம்பந்தமாய் ஐவர் பொலிஸ்பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

### பொதுத்தேர்தல் முடிவுகள்

நிகழும் ஆடிமாதம் 20-ந்திகதிபுதன்கிழமை நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தல்முடிவுகள் அன்றிரவே அறிவிக்கப்பட விருக்கின்றன. அவைகளை வானொலிமூலம் உடனுக்குடனே தெரிவிக்கத் தேர்தல் பகுதி ஒழுங்குசெய்திருக்கிறது. சென்றபங்குனி மாதப் பொதுத்தேர்தலின்போது பொலிஸ் தலைமைக் காரியாலய வானொலியின் தொடர்பைக்கொண்டு முடிவுகள்தெரிவிக்கப் பட்டமையால் காலதாமதம் ஏற்படலாயிற்று. இம்முறை புதிய வழிவகைகள் கையாளப்பட விருக்கின்றன.

### தலைவில்லுத் திருயாத்திரை

தலைவில்லுச் சந்தானுள் திருநாள் அடுத்துவருவதையிட்டு அத்திருப்பதி செல்லும் யாத்திரிகர்களுக்கு நிகழும் ஆடி 17-ந் திகதிமுதல் ஆவணி 2-ந் திகதியீறாக மலிவு திக்கெற்றுகள் வழங்க றெயில்வேப் பகுதி ஒழுங்கு செய்திருக்கின்றது. தனிப்பட்ட யாத்திரிகர்களுக்கு ஒற்றைச் சலாரிலும், அதிற் பாதியிலுமாக—அதாவது ஒன்றரை விகித ஒற்றைச் சலாரிலே மூன்றும் வகுப்புக்கும், பத்து அல்லது அதற்கு மேற்பட்டவர்களைக்கொண்ட குழுவினருக்கு ஒன்றேகால்விகித ஒற்றைச் சலாரிலே எல்லா வகுப்புகளுக்கும் திக்கெற்றுகள் வழங்கப்படும். றெயில்வேஸ்ரேஷனுக்கும் திருப்பதிக்குமிடையில் பஸ்சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது.

### நெல்லின் உத்தரவாத விலை

உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் கொள்வனவு செய்யப்படும் நெல்லின் விலையைப் புசல் ஒன்றுக்கு இரண்டு ரூபா வீதம் குறைக்கும்படி விவசாய ஸ்தாபனஉபகம்மிற்றி திட்டசபைக்குச் சிபாரிசு செய்திருக்கிறது. நெல்லின் இப்போதைய உத்தரவாதக் கொள்விலை புசல் ஒன்றுக்கு 12 ரூபாவாகும். உள்நாட்டு நெல்லின் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தை இவ்விதம் 2 ரூபா விலை குறைப்பது எவ்விதத்திலும் பாதிக்கமாட்டாதென்று முன்சொன்ன உபகம்மிற்றி எண்ணுகின்றது. ஆயினும், நெல்லின் உத்தரவாதவிலையைக் குறைக்கும் உத்தேசம் அரசாங்கத்துக்கு இல்லையென்றும், அங்ஙனம் குறைக்க உத்தேசித்திருப்பதாகச் சில அரசியல் வாதிகளால் பரப்பப்படும்வதந்தி பொய்யென்றும் பிரதமமந்திரி தஹநாயகா தெரிவித்திருக்கின்றார்.



மகாவந். எமது மேற்றிராணியாண்டவர் அவர்கள் திருநாமங்கொண்ட பெருநாள் நிகழும் ஆடி மாதம் 20-ந் திகதியாகிய வருகிற புதன்கிழமை வருகின்றதுஎன்பதை அவரது ஞானமக்கள் அனைவருக்கும் ஞாபகப்படுத்துகின்றோம். எல்லாம் வல்ல இறைவன் ஆண்டகை அவர்களையும், அவர் எமது மேற்றிராசனத்தின் அபிவிருத்திக்கெனக் கையிடும் கருமங்களையும், ஆற்றிவரும் திருத்தொண்டுகளையும் ஆசீர்வதித்தருளும்படியாக அன்றுதினம் நாமெல்லாம் ஒன்றுசேர்ந்து மன்றாடுவோமாக! நிற்க, அன்றே பாராளுமன்றப் பொதுத்தேர்தல் நடைபெறும்—அதாவது பாராளுமன்றத்திற்கு நமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் தினமுமாகும். சமீபத்திலே ஆண்டகை அவர்கள் இத்தேர்தல் சம்பந்தமாய் விடுத்த திருமுகத்தில், நாம் சர்வேசுரனின் பிள்ளைகளும், உண்மைத் தேசபக்தர்களும் என்ற மட்டிலே எப்படிப்பட்டவர்களைப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்து அனுப்பவேண்டுமென்பதை அழுத்தமாக எடுத்துக்காட்டி, "எவ்வித அசௌகரியங்கள் ஏற்பட்டபோதிலும் உங்கள் வாக்குரிமையை உபயோகிக்கும்படி முந்தமுந்த உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்; மனச்சாட்சிச் சுதந்திரத்தை நாம் அனுபவித்துச் சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் வாழ உதவிபுரியக் கூடியவர்களுக்கே நமது வாக்குகளை நாம் வழங்கவேண்டும்" என்று புத்திபுகட்டியிருப்பதை இந்தவேளை அனைவர்க்கும் நினைவூட்டி அவர் கேட்டுக்கொண்டபிரகாரம் பின்னரும் தொடர்ந்து செபங்களும், பரித்தியாகங்களும் செய்து எல்லாம் நன்மையாய் முடியும்படியாகத் தேவனின் திருவருளை இரந்துவருவோமாக!

**"பாதுகாவலன்" பேரால் ஆண்டகை அவர்களுக்கு எமது மனமுவந்த பெருநாள் சோபனம் கூறுகின்றோம்.**

### யாழ்ப்பாணப் புதிய மேயர்

சகல அங்கத்தவர்களும் சமுகமளித்திருக்கச் சென்ற 6-ந் திகதி புதன்கிழமை நடைபெற்ற யாழ்ப்பாண நகரசபைக் கூட்டத்திலே யாழ்ப்பாணப் புதிய மேயராகத் திரு. பி. காசிப்பிள்ளை தெரியப்படலாயினர். இவருக்கு 8 வாக்குகளும், மேயர்பதவிக்கு இவரை எதிர்த்துப் போட்டியிடும் திரு. அல்பிறெட் சுவாம்பிள்ளைக்கு 6 வாக்குகளும் கிடைத்தன. திரு. பி. காசிப்பிள்ளையின் பெயரை முன்னாள் மேயர் திரு. ஏ. ரி. துரையப்பா பிரேரிக்க, திரு. எஸ். நவரத்தினம் அனுவதித்தார், திரு. ஏ. சுவாம்பிள்ளையின் பெயரைத் திரு. ஏ. விஸ்வநாதன் பிரேரிக்க, திரு. ஏ. ஜே. காசிப்பிள்ளை அனுவதித்தார்.

### தேவ அழைத்தல்களின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

**கிறது; அதிகமான குருமாரின் தேவை எத்துணை பெரிதாயிருக்கிறது என்பதை அனுபவத்திலே அநேக இளைஞர்கள் கண்டறிந்து குருத்துவத்துக்குப் படிக்கத் தீர்மானிக்கிறார்களென்று அவர் கூறுகிறார்.**

---

## மட்டக்களப்புத் தாண்டவன்வெளித் தபால்

**பூசைப்பரிசாரகர் தினம்:**

ஆனித்திங்கள் 20-ம் நாள். எமது பங்குப் பூசைப்பரிசாரகரின் பாதுகாவலராகிய அர்ச். ஞானப்பிரகாசியார்பேரில் பாடப்பெற்ற புதுமைப் பாடல் ஒன்று நாடாக்களில் ஒலிப்பதிவு செய்யப்பட்டு மாலைத்தென்றலுடன் மருவிப் பரவுமாறு ஒலிபெருக்கி துணைபுரிந்து கொண்டிருந்தது. பங்குக் குரவர் வண. ஜி. ஈ. எல். வமபேக் சுவாமிகள் பூசைப்பரிசாரகர் அனைவருமசமுகமளிக்கப் பிரசங்கஞ் செய்து, மாலைஆராதனை பாடித் திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் அருளினர். திருநாளன்று காலை பாடற்பூசையின்பின் அர்ச். ஞானப்பிரகாசியாரின் திருப்பண்டம விசுவாசிகளுக்கு முத்திசெய்யக் கொடுக்கப்பட்டது. அன்று பிற்பகல் பூசைப்பரிசாரகர் ஒன்றுகூடிக் குருத்துவ அழைத்தல், ஊதாரிப்பிள்ளையின் உவமை என்பனவற்றை நாடகமாக நடித்து, ஆடல், பாடல், தேநீர் விருந்து ஆதியவைகளால் அன்று தினத்தைப் பரிமளிப்பாக்கினர். தேநீர் விருந்தின்போது பங்குக் குரவர் அவர்களின் சேவைநலம பாராட்டி, நன்மதிகள், அழைத்தல் என்னும் கல்விருந்தளித்து எல்லோருக்கும் உற்சாகம் அளித்தார்.

**திரு இருதயத் திருநாள்:**

இருதயங்களின் அரசராய யேசுவின் திவ்விய இருதயத் திருநாளுக்கு முன் திரிதின ஆராதனைகள் பத்திச் சிறப்பாக நடந்தன. திருநாளன்று காலை பாடற்பூசையின்பின் திவ்விய நற்கருணை எழுந்தேற்றம்செய்து வைக்கப்பட்டது. நாள் முழுவதும் ஆராதனைகள் முறைப்படி நடைபெற்று வந்தன. பிற்பகல் தேவநற்கருணை ஆசீர்வாதத்தின்போது எமது பங்கினை ஒப்புக்கொடுக்கும் செபம் சொல்லப்பட்டது. அதன்மேல் திவ்விய பூசை நிறைவேறியது. அடுத்த நாளாய சனிவாரம் பிற்பகல் பங்கிலுள்ள திரு இருதயச் சபையாரின் ஆதரவில் ஆலயமும், முன்றிலும் அழகு செய்யப்பட்டுச் செபமாலை, பிரார்த்தனையுடன் சுற்றுப்பிரகாரம் நடைபெற்றது. அதன்மேல் பங்குக் குரவர் திரு இருதய ஸ்தாபகம், பங்கினர் இவ்விஷயத்தில் எடுக்கவேண்டிய ஊக்கம், சபையாரின் பணிகள்பற்றி ஒருசிறந்த பிரசங்கம்செய்தனர். அதன்மேல் திரிகோணமலைமேற்றிராசன பரிபாலனர் மிகவண. ஜெறோம் டீசாசுவாமிகள் எமதுபங்குக்குரவரும், வண. எவ். எம். செலர்சுவாமிகளும் துணைபுரிய வேஸ்பர்பாடித் திவ்விய நற்கருணை ஆசீர் அருளினர். அடுத்தநாளாய ஞாயிறுவாரம் 2-ம்பூசை பாடற்பூசையாக நிறைவேறியது. பூசையின்பின் திருஇருதயச்சபையினர் ஒன்றுகூடிக் காலைவிருந்தருந்தினர். அதன்மேல் பொதுக்கூட்டம் நடைபெற்றது. புதுவருடஉத்தியோகஸ்தர்களது தேர்தலின்முடிவுவருமாறு:

தலைவர்: திரு. ஜே. புவிராசசிங்கம், உபதலைவர்: திரு. பிறுண்சீஸ்யோசவ், காரியதரிசி: திரு. எம். சந்தியாப்பிள்ளை, தனாதிகாரி: திரு. வி. மாற்கு, ஆலோசகர்: திரு. எம். ஈ. செபஸ்தியாம்பிள்ளை. கட்டளைக்குரவரது நன்மதிகள் ஆசீருடன் கூட்டம்கலைந்தது.

—நிருபர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

## தமிழ்நாட்டு இளைஞர்களே ஒன்றுபடுவோம்!

A. சூசைநாதர், B. A., B. T.
கத்தோலிக்க இளைஞர்மன்றத்தலைவர், திருச்சிராப்பள்ளி.
[தொடர்ச்சி]

மெய்மறை வளர்ச்சிக்காகக் கத்தோலிக்க இளைஞர்கள் ஒன்றுபடவேண்டும்என்று கண்டபின், அவ்வித ஒற்றுமை இன்றியமையாததுஎன்று ஏற்றுக்கொண்டபின் அவ்விதஐக்கியத்தை ஏற்படுத்துவதிலே ஏற்படும் இடையூறுகள் எத்தனைஎன்றஏக்கம் பலருக்கு உண்டாகும். ஆனால், ஏக்கத்திலே ஆக்கம்ஏதுமில்லை; ஊக்கத்திலேதான் ஆக்கம்பிறக்கும். எத்தனை இடையூறுகள் எழுந்தாலும் எதையும்தாங்கும் இளைஞர்கள் ஒன்றுபட்டுத்தான் ஆகவேண்டும். அதுதான் முடிவு. இடையூறுகள் பலஇருப்பினும் முடிவின்கண் உண்டாகும் பயனையும் கருதவேண்டும். வள்ளுவன் சொன்னான்:

"முடிவும் இடையூறும்
முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்"

என்று. இடையூறுகள் பலகடந்து, இளைஞர்களது ஒற்றுமை என்னும் முடிவிலே படுபயன்தான் என்ன? எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கு ஏற்றபயன்தானா?

ஓர் இடத்திலே அல்லது ஒருபங்கிலே இளைஞர்கள் ஒன்றுபட்டால் அவர்களுடைய ஆன்மீக நல்வாழ்விற்கு வழிஏற்படும். ஞானக்காரியங்களிலே அறிவுபெருக வழிஏற்படும். யேசுவின் போதனைக் களஞ்சியமாம் சுவிசேஷ அறிவுபெறச் சந்தர்ப்பம் ஏற்படும் — அவ்வித சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி ஒவ்வொரு கத்தோலிக்க இளைஞனும், இளம்பெண்ணும் யேசுவின் வார்த்தையைத் தாங்கிச்செல்லும் கருவியாகத் திகழவேண்டும். கிறீஸ்துவின் வாழ்வைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இருக்கவேண்டும். மேலும், கத்தோலிக்கஇளைஞர்களது ஒற்றுமையினால், திருச்சபையின் ஞானக்காரியங்களிலே, அப்போஸ்தலத்துவ வேலையிலேஈடுபட்டு யேசுவுக்காக உழைக்க வாய்ப்புஏற்படும். தனிப்பட்டோர்செய்யும் சேவையைவிட, சங்கவாயிலாக, ஸ்தாபனரீதியாக ஞானஅதிகாரிகளுடன் ஒத்துழைத்துச் செய்யும்சேவை மேலானது; அதற்கு ஒருவழிஏற்படும். திருச்சபையின் ஞானஅதிகாரிகளுக்கு வலதுகையாகப் பணியாற்றி, அவர்களால் செய்யமுடியாத செயல்களைச்செய்ய இளைஞர்களது ஒற்றுமை வழிவகுக்கும். "என்மந்தையைச்சேராத வேறுபல ஆடுகளும் இருக்கின்றன; அவைகளும்கொண்டு வந்து சேர்க்கப்படவேண்டும்" என்ற யேசுவின் சொற்களுக்கொப்ப, சோர்வில்லாத போர்வீரர்களாகத் திகழ, இளைஞர்கள் ஒற்றுமை வழிகாட்டும். இளைஞர்கள் ஒன்றுபட்டால், ஒவ்வொரு கத்தோலிக்க இளைஞனும் நன்னிலைநின்று, தன்னிலைதிரியாது, பிறர்நிலையையும்உயர்த்தப் பெரிதும் முயல, அவ்வொற்றுமை வழிவகுக்கும்.

தமிழ்நாட்டுக் கத்தோலிக்க இளைஞர்கள் ஒன்றுபடவேண்டும்என்பதை முடிவாகக்கொண்டு எழும் இடையூறுகளையும் எதிர்த்துச்சென்றால் அதனால்ஏற்படும் பயன்கள் இவையென்று ஒருவாறுமுடிவுகண்டபின், அவ்விதஐக்கியத்தை எவ்விதம் ஏற்படுத்துவது என்றகேள்வி எழுகின்றது.

"சொல்லுதல் யார்க்கும் எளிய;
அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"
— உண்மைதான்.

சொல்லாலான பெருந்திட்டங்களைச் செயல்படுத்துவது அரிதானதுதான். அரிதானதுஎன்பது மனிதனுக்கே உரியபண்பாகும். ஆண்டவன்உதவியால் ஆகாதது ஏதும்இல்லை. 'முடியாது' என்றசொல்லே என்னுடைய அகராதியில் இல்லைஎன்று முழங்கினான் நெப்போலியன். செயற்கரிய செய்வார் பெரியார். "என்னையன்றி உங்களால் ஏதும்செய்ய இயலாது", "நான் என்றும் உங்களுடனே இருப்பேன்!" என்ற யேசுவின்சொற்களை இறுகப்பற்றிச் செயலில் இறங்க வேண்டியதுதான் நமதுகடமை,

முதலில் ஒவ்வொருபங்கிலும்உள்ள கத்தோலிக்க இளைஞர்களை ஒன்றுபடுத்தி மன்றங்கள், சங்கங்கள் அமைக்கவேண்டும். பிறகு ஒவ்வொரு மேற்றிராசனத்திலேயும்உள்ள எல்லா மன்றங்களையும்இணைத்து ஓர்ஐக்கிய சங்கம் அமைக்கவேண்டும். இது போன்ற காரியங்கள் திருச்சிமேற்றிராசனத்திலே செய்துகொண்டு வருகின்றோம். மற்ற இடங்களிலேயும் செய்யப்பட்டிருக்குமென நம்புகிறேன். இதுவரை செய்யப்படாவிட்டால் இனிச் செய்யப்பட வேண்டும். அடுத்தபடியாக, தமிழ்நாட்டு எல்லா மேற்றிராசனங்களிலும் இவ்வாறு அமைக்கப்பட்ட மத்தியமன்றங்களையெல்லாம்இணைத்துத் தமிழ்நாட்டுக் கத்தோலிக்க இளைஞர்இயக்கம் என்று அமைக்கலாம். இதைப் போலவே தமிழ்நாட்டுக் கத்தோலிக்க சேவாசங்கம்என்றும் ஏற்படுத்தி இவற்றைக் கண்காணிக்க ஓர் இயக்குநரையும் ஏற்படுத்த வேண்டும். இவைஇரண்டும் இயங்குவதுபோல, தமிழ்நாட்டு இளம்பெண்கள் இயக்கம்என்றும் இயக்கப்படவேண்டும். இவை மூன்றும் உடனடியாகச் செய்யப்பட வேண்டியவை.

மாநாடுகளிலே, பொது மேடைகளிலே பேசுவதோடு நின்றுவிட்டால் அரிதான செயலை ஆற்றுவதாகாது. இம்மாநாட்டின் காரணமாகவாவது ஒவ்வொருவரும் தீர்மானம் செய்துகொள்ளவேண்டும்: என்னுடைய ஊரிலே, என்னுடைய பங்கிலே உள்ள இளைஞர்களை ஒன்றுபடுத்தி மன்றம் அமைப்பேன் என்று. மேலும் தீர்மானங்கள் செய்து கொள்ளவேண்டும். ஒரு கோடிமுனை முதல் மறுகோடி முனை மட்டும் யேசுவின் நாமம் ஒலிக்கச் செய்யமன்றம் அமைப்பேன்; நாட்டிலே நடமாடும் தப்பறைகளுக்கும் நாஸ்திகத்துக்கும் மாற்றுகாணமன்றம் அமைத்து, தமிழ்நாட்டு மன்றங்கள் ஒன்றுபட உழைப்பேன்; உறங்கிக் கிடக்கும் மக்கள் உள்ளங்களிலே உற்சாகம் எழுப்ப உழைப்பதற்காக மன்றம் அமைப்பேன்: மீன் பிடிப்போர் மனிதர்களைப் பிடிப்பவர்களாக மாறியதுபோல், மாறி யேசுவின் அரசாங்கம் வலுப்பெறச்செய்ய இளைஞர்களதும் இளம் பெண்களதும்சக்தி உபயோகம் ஆகும்படி செய்ய மன்றம் அமைப்பேன்என்று, இவ்வித திண்ணிய எண்ணத்துடன் வெளியேறி செயலாற்றக் கேட்டுக் கொண்டு என்உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

கிறீஸ்து மாவேந்தர் வாழ்க!
அவரது அரசு வருக!!

## உறுதிவாக்காளர் பகுதி

1. பின்வரும் வாக்காளர்தங்களது பிறந்தநாளை இம்மாதம் கொண்டாடுவார்கள். அவர்கள்மீது தேவஆசியை வேண்டுகின்றோம்.

2. சவிரிமுத்து அருளானந்தம், (ஆடி 30).
4. எம். எஸ். அந்தோனிப்பிள்ளை, (ஆடி 26).
17. குருகுலசூரிய அலக்சீஸ் ஜெஸ்மன் எக்ஸ்பெடித் பேர்னாண்டோ, (ஆடி 17).
23. அல்பிறெட் எஸ். வஸ்தியாம்பிள்ளை, (ஆடி 29).
27. ஞா. அந்தோனிமுத்து, (ஆடி 23).
39. சூசை நசரேன் லேயோன் பேர்னாண்டோ, (ஆடி 27).
40. யோசப் கிறிஸ்ரியன் செல்வரட்ணம், (ஆடி 21).

2. உறுதிவாக்காளர் தினந்தோறும் இத்தாபனத்தில் நடந்துவரும் தேவ ஆராதனைவேளைகளில் நினைவுகூரப் படுகின்றனர். பிரத்தியேகமான விதமாய் மன்றாட்டு வேண்டி நிற்போர், தமது விண்ணப்பங்களை எமக்கு அனுப்பிவைப்பின், அவை தேவநற்கருணை எழுந்தேற்றம் பண்ணப்பட்டிருக்கும்பீடத்தில் மிக்கபூச்சியமாய்ச் சமர்ப்பிக்கப்படும்.

## எழுத்தாளர் மன்றம்

பின்வருவனவற்றிலுள்ள ஏதாவது ஓர் இனத்தில் தாம் அனுப்பிய கட்டுரைகள் ஐந்துமுறை பிரசுரிக்கப்பட்டிருப்போர் எமக்கு அறிவிப்பின் வெகுமதிக்குஉரித்துடையோராவர். பிரசுரிக்கப்பட்ட திகதியும், தலையங்கமும் குறித்து எமக்கு அனுப்பப்படல் வேண்டும்.

1. புத்திமதிகூறி எழுதும் கடிதங்கள் ஒரு குறித்த குற்றத்தைக் கண்டித்தும், அதை வெல்லுவதற்குரிய வழிகளைக் காண்பித்தும் எழுதப்படல் வேண்டும்.
2. கதைகள் மனுஷசுபாவத்துக்குரிய பலவீனங்களை வீரியத்துடன் ஜெயிக்கப் பிரயாசிக்கும் செயல்களைக் கொண்டனவாய் இருத்தல் வேண்டும்.
3. சம்பாஷணைகள் ஏதோநற்படிப்பினையைத் தருவனவாய் இருத்தல் வேண்டும்.
4. செய்யுட்கள் முத்தர்களினதும், மரித்தோரினதும் நற்குணங்களை விளக்குகின்றனவாயும், வாழ்க்கையின் துன்பங்களை நன்மனதுடன் சகிக்க உற்சாகம் கொடுப்பனவாயும் இருத்தல் வேண்டும்.

## புனிதர் மொழிகள்

பேசுவது கொஞ்சமாயும், கேட்பது அதிகமாயும் இருப்பதுநலம்.

தேவனைமட்டும் ஒருவன் தன்மனதில் வைத்திருப்பானாகில், அவனுக்கு வேறொன்றும் தேவையில்லை.
— அர்ச். இஞ்ஞாசியார் லோயோலா.

* * *

- எல்லோருடனும் பொறுமையாய் நடந்துகொள். உன்னையிட்டோ அதிக கவனமாயிரு.
— அர்ச். பிரான்சீஸ் சலேசியார்.
- பெரிய காரியங்களைச் செய்வதற்கே நான் பிறந்தேன்.
—அர்ச். ஸ்ரனிஸ்லாஸ்

## ஈசனே என் நேசனே!

(தெல்லியூர், எ. பி. ஞானப்பிரகாசம்)

பாடியுனைப் புகழ்வேன்
பாமாலை புனைந்திடுவேன்
தேடியுனைத் தொழுவேன்
திக்கற்ற எனைக்காவாய்!

●

சிந்தையிலே வீற்றிருப்பாய்
சிங்கார நடம்புரிவாய்
எந்தையே போற்றுகின்றேன்
எம்பெருமான் நீவாழி!

●

அன்னையாய் இருக்கின்றாய்
அப்பனுமாய்க் காண்கின்றாய்
உன்னையான் என்னென்று
உவந்தழைப்பேன் சொல்வாயோ!

●

ஏற்றந்தனை எழுப்பிவிட்டு
ஏழையையும் படைத்துவிட்டு
ஆற்றலுள்ள நின்றொழிலை
ஆரறிவார் அறியேனே!

●

இன்றென்னைக் காத்திட்டாய்
இன்னமுதந் தந்திட்டாய்
என்றுமெனைக் காத்திடுவாய்
ஈசனே என் நேசனே!

## அறிவுச் சுடர்

1. ஓரேநிலை உய்விக்கும் இருநிலை சீரழிக்கும்.
2. மெய்மறக்கும் தியானம்மூலம் மெய்ப்பொருளைக் கண்டறிவாய்.
3. விலைமதிப்புப் பொருளில்அல்ல நாம்கொடுக்கும் மதிப்பிலேதான்.
4. அணுவுக்கும் அளவுண்டு ஆனால், அளவில்லை.
5. எட்டியது கையளவு, எட்டாதது மனஅளவு.
6. தாயும் தன்சொல் அறியவேண்டும்.
7. தீயோர்க்கு நல்வழியும் தீவழியே, அஃதல்லார்க்கு எவ்வழியும் நல்வழியே.
8. அன்பு ஒருகூரியவாள், அது பகைவனையும் வெல்லும்.
9. தன்நிலை அறிந்தே முன்நிலை மேற்கொள்.
10. சுயநலமின்றே திருப்பணி மேற்கொள்; திருப்பணிகொண்டே இறைவனைக் கண்டடை.
11. துன்பத்தை இன்பமாக்கிக் கொள்ளப் பழகுகிறவனே துறவி; அதுவேபொதுஅடிப்படை இன்பம்.
12. உண்மையான இருதய அக்களிப்பு இன்பத்தில் அல்ல, துன்பத்திலேதான்.
13. உள்ளத்தின் இன்பம் எப்பொருளிலும் அல்ல, மனநிலையில் தான்.
14. சேர்த்துவை, சேர்த்துவை பணத்தையல்ல, புண்ணியத்தை.
15. நஞ்சைக்கண்டு பயம்வேண்டாம், கபட நெஞ்சைக்கண்டே பயம் வேண்டும்.
16. அவசரக்குடுக்கைக்கு ஆவதும் கிட்டாது.
17. அகக்கண் பழுதாயின், அங்கக் கண் வீணேதான்.

ரெஜினல்ட் விக்டோரியா,
110/5, கொட்டாஞ்சேனைவீதி,
கொழும்பு— 13.

- பூரித்த உள்ளம், எவரிலும் பார்க்க வேகமாய்ப் பரிசுத்ததனத்தில் முன்னேறும்.
— அர்ச். பிலிப்பு
- தேவனில் உன் சிநேகிதர்களை நேசி; தேவனுக்காக உன் சத்துராதிகளைச் சிநேகி.
— அர்ச். எலிசியுஸ்.
- தன்னையே அதிகாரியாய்த் தெரிந்துகொள்பவன், தன்னை ஓர் பைத்தியகாரனின் கண்காணிப்பில் வைக்கிறான்.
— அர்ச். பேர்னாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

அன்புத் தம்பி, தங்கையரே!

இன்னும் சில நாட்களில் ஒரு பொதுத்தேர்தல் வருகின்றது. இது சென்ற பங்குனிமாதத்தில் நடைபெற்றது போல் இராது, நிலையான — ஸ்திரமான ஒரு நல்லாட்சி நிறுவப்பட்டு, எமது சமயமும், எமது பாடசாலைகளும் காப்பாற்றப்படவும், நாட்டில் சமாதானமும், அமைதியும் நிலைநாட்டப்படவும். தமிழர் சிங்களவர் ஐக்கியமாக வாழ, நாஸ்திகக் கொள்கைகள் நாட்டைவிட்டோட இப்பொழுத்தேர்தல் வழிபண்ணவேண்டும், எமது சமய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கருத்துகளுக்காக மன்றாடிவாருங்கள்.

உங்கள் அன்புள்ள அண்ணா



## மனத்தூய்மை பெறுவோம்

பரிசுத்தமான—மிருதுவான—பிரமாணிக்கமான இருதயம் உள்ளவதான் நம் அன்னையாகிய தேவதாய். அவளின் இருதயம் தூய்மையாய், ஞானஒளிப் பிளம்பாய்ப் பிரகாசிப்பதெல்லாம் பிள்ளைகளாகிய எங்கள் நிமித்தமேயாகும்.

அவகொண்ட நேசபாசத்தின் பிரதிபிம்பம் அதுவெனில், நாங்களும் அதற்கு உபகாரமாக அவளின் இருதயம்போல் எங்கள் இருதயத்தையும் வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். இருதயம் சுத்தமாயிருப்பின் எங்கள் செயல், பேச்சு, மற்றும் யாவும் அவ்வழியே இருக்குமென்பதில் ஐயப்பட இடமில்லை.

இருதயத்தின் எதிரொலியாக ஒலிப்பதுதான் பேச்சு. இதை ஒரு கவிஞர்:

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் — வாக்கினிலே
உண்மை ஒளி உண்டாம்"

எனப் பாடியிருப்பதும் ஈண்டு நோக்கற்பாலது

எங்கள் இருதயத்தை அழுக்குப்படாது பாதுகாக்க வேண்டியது, தலையாயஒருகடமை என்பதை உணரத் தவறக்கூடாது. ஆன்மா அழியக்கூடிய ஒரு பொருளல்ல. அது அழியாத, தேடமுடியாத ஒரு மாபெருஞ் செல்வம். இச்செல்வத்தைப் பேணிவளர்க்க நாங்கள் முயலவேண்டும். துன்ப துரிதங்களை நன்மனதோடு சகித்துக்கொள்ளவேண்டும்.

மரித்த உடலைப் புதைத்துவிடின் அது அழுகி மண்ணோடு மண்ணாகிறது. ஆனால், ஆன்மாவோ அழியமாட்டாது. அது எங்களைப் படைத்த தேவனிடம் போகும். இதை நாங்கள் அறிந்தும் அறியாதவர்கள் போல் நடந்துகொள்வது மதியீனமல்லவா?

இன்றையஉலகம் கோபம், குரோதம், பொய், களவு, சூது, அக்கிரமம், நாஸ்திகம்போன்ற கொடிய தீமைகளில்சிக்கிச் சீரழிகின்றது. எனவே, மனிதஆன்மா தேவனை விட்டு வெகுதூரத்தில் சென்றுகொண்டிருக்கிறது என்று கூறினால் பிழை உண்டா?

இத்தகைய மகா பயங்கரத்திற்குரிய தீமைகளின்மத்தியிலே, அணு, ஜலவாயுக் குண்டுகளின் கோரப்பிடியிலே, பணத்தின் போதையிலே மூன்றாவது உலகயுத்தம் வருமாயின் எவரும் அதையிட்டு ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

இவ்வளவு தூரம் ஆன்மாக்கள் கெட்டொழியக் காரணம், ஆன்மாவின் மதிப்பை உணரத் தவறியதேயாகும். இனியாவது அதனை உணர்ந்து நல்வழியில் நடந்துகொள்ள, ஆன்மாவைத் தூய்மையாய் வைத்துக்கொள்ள உதவி புரியும்படி மாசில்லாத இருதய நாயகியிடம் அடைக்கலம் புகுவோம். நாங்கள் பாவிகளாயிருந்தாலும், துஷ்டராயிருந்தாலும் தேவதாயின் மாசற்ற இருதயத்தின்மட்டில் மாறாத அன்பு கொள்வோமாகில், சகல குற்றங்கட்கும் மெய்யானமனஸ்தாபப்படுவோமாகில் அவளின் அன்பு எங்களைவிட்டு அகலாது என்பது வெள்ளிடைமலை.

"மாசில்லாத இருதயஅன்னையே! எங்கள் இருதயமும் உமது இருதயத்தைப்போலாகப் பண்ணியருளும்" என்று வேண்டி, மாசில்லாத இருதயத்தின் மட்டில் அன்பு கொள்வோமாக! இருதயத்தைப் பரிசுத்தப் படுத்திப் புனிதவீரர் அணியில் நின்று தேவதாய்க்கு மகிமை உண்டு பண்ணுவோமாக.

---

சிறுவர், சிறுமியரிடமிருந்து சிறுகதைகள், கட்டுரைகள், அர்ச்சியசிஷ்டர்களின் சுருக்கமான வரலாறு, விடுகதைகள், காஷ்யமான சம்பாஷணைகளை அண்ணா எதிர்பார்க்கிறார்.

அண்ணாவின் முகவரி:

அண்ணா,
புனித அன்னாள் கோவில்,
பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம்.

---

**உங்களுக்குத் தெரியுமா?** By Scio



1816-ம் ஆண்டானது கோடைகாலமற்ற ஒரு வருடமென்று பிரஸ்தாபமாக அறியப்பட்டுள்ளது. ஏனெனில், அகால குளிர்ந்த சுகாத்தியம் பிரித்தானிய தீவுகளிலும், பிரான்ஸிலும், ஸ்பெயினிலும், இத்தாலியிலும், ஐக்கிய அமெரிக்கதேசத்திலும், உலகின் மறுபகுதிகளிலும் பரந்திருந்தது. இதற்குக் காரணம் பசிபிக் சமுத்திரத்திலுள்ள எரிமலை வெடித்துப் பிளந்து கக்கிய தூசியானது பூமியின் பெரும் பகுதிகளுக்கு மேலாகவுள்ள மேற்பரமாணு மண்டலத்தை நிரப்பிச் சூரியனின் உக்கிரத்தை மங்குளமாக்கி விட்டமையேயென்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

---

### மரியாயிடம் ஏன் போகவில்லை?

ஓர் ஊரிலே, ஒருமுறை யேசுவின் திருப்பாடுகளின் காட்சி நடித்துக் காட்டப்பட்டது. பெருந்தொகையானோர் அக்காட்சிக்குச் சென்றிருந்தனர். ஒருதாய் தனது ஏழுவயதுச் சிறுவனோடு அங்கு சென்றிருந்தாள். அந்தக் காட்சியிலே யூதாஸ் யேசுவைக் காட்டிக்கொடுத்தபின் குருக்கள் சபைக்குச் சென்று தான் குற்றமில்லாத ஒருவரைக் காட்டிக் கொடுத்துவிட்டதாகக் கூறி, 30 வெள்ளிக் காசையும் அவர்கள் சமுகத்தில் வீசி எறிந்துவிட்டுப் பெரிய சத்தமிட்டு, "நான் யாரிடம் போவேன் ........." என்று அலறிக்கொண்டு ஓடிய ஒரு கட்டம் காண்பிக்கப்பட்டது. அவ்வேளை அந்த ஏழுவயதுச் சிறுவன் தன் தாயாரை நோக்கி, "அம்மா! இவன் ஏன் மரியாயிடம் போகவில்லை?" என்று கேட்டான்.

இதிலிருந்து அந்தச்சிறுவன் தேவதாயாரிடம் நம்பிக்கை வைத்தால் கைவிடப்படமாட்டோம் என்பதை அறிந்திருந்தான் என்பது தெளிவு. தேவதாயாரை நம்பியவர்களை அவள் ஒருபோதும் கைவிடமாட்டாள். கைவிட்டதும் இல்லை.

---

உங்கள் விஷயதானங்களை
மேல்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்
"அண்ணா",
அர்ச். அன்னம்மாள் கோவில்,
பாண்டியந்தாழ்வு,
சுண்டிக்குளி.

---

### கண்டுபிடியுங்கள்

ஐந்து எழுத்துக்கள் கொண்ட
ஓர் கண்டத்தின் பெயர்.

அகத்திலுண்டு, முகத்திலில்லை.
மென்மையிலுண்டு, கடினத்திலில்லை.
கரியிலுண்டு, சாம்பலிலில்லை.
மூக்கிலுண்டு, காதிலில்லை.
காட்டிலுண்டு, நாட்டிலில்லை.

S.P. வின்ஸ்ரன்,
அர்ச். பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

---

**தம்பி தங்கையரே!**

உங்களிற் பலர் "பாலர்பக்க அங்கத்தின"ராகச் சேர்த்துக்கொள்ளும்படி நெடுநாளாகக் கேட்டுவந்திருக்கிறீர்கள். உங்கள் ஆவலைப் பூர்த்திசெய்யத் தக்கதாக அங்கத்துவ மனுப்பத்திரம் ஒவ்வொரு வாரமும் பிரசுரிக்கப்படும். ஒருவர் குறைந்தது 3 கூப்பன்களாவது நிரப்பி அனுப்பவேண்டும். 3 கூப்பன்களும் ஒரே கவரில் வைத்து அனுப்பப்படவேண்டும்.

நிகழும் ஆடிமாதம் 1-ந் திகதி (1–7–60) யில் 15 வயதாயிருப்பவர்களும், அதற்கு உட்பட்டவர்களும் மாத்திரமே இதில் அங்கத்தவராகச் சேரலாம். அவர்களுக்கு அடையாள இலக்கங்கள் கொடுக்கப்படும். கட்டுரை, கதைகள் எழுதும்பொழுது அந்த இலக்கம் குறிக்கப்படவேண்டும்.

**பாலர் பக்கம்**

**அங்கத்தவர் மனுப்பத்திரம்**

பெயர்: ..........................................................

ஆண் / பெண்: ..........................................................

பிறந்த திகதி: ..........................................................

வகுப்பு: ..........................................................

பாடசாலை: ..........................................................

வீட்டு விலாசம்: ..........................................................

விசாரணைப்பங்கு: ..........................................................

முதல் நன்மை பெற்ற திகதி: ..........................................................

உறுதிப்பூசுதல் பெற்ற திகதி: ..........................................................

விண்ணப்பப்பத்திரம் அனுப்புவோர் மூன்று விண்ணப்பப் பத்திரங்களையும் ஒன்றாக வைத்து அனுப்பவேண்டும். தனித்தனி அனுப்புவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

---

### ஓடிவந்தேன்

'ஜெயம்'

அன்பான யேசுவே! உம்எண்ணம் கொள்ளும்
அளவிலா மகிழ்வினால் என்உள்ளம் துள்ளும்
என்பாவக் கறைகளும் எனைநீங்கிப் போகும்
என்னாளும் ஈடற்ற பேரின்ப மாகும்.

●

நீங்காத நேசத்தின் நிறைவான மணியே!
நிகரிலாக் கருணையின் வற்றாத சுனையே!
பூங்காவின் மணமலர் பறித்தே யெப்போதும்
பூசித்துச் சேவித்துப் போற்றுவேன் பாதம்.

●

என் ஆசை அன்பரே! எனக்காக வந்தீர்!
என்னோடு பேசுதற்கோ ஏங்குகின்றீர்!
மன்னாதி மன்னரே! மனம்வெந்து நொந்தீர்!
மனமாறச் செய்யவே மகனோடி வந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1-ம் வருட மரண ஞாபகம்

எனது நேசபத்தாவும், எனது அருமைத் தந்தையுமாகிய அந்தோனிப்பிள்ளை செபமாலை அவர்கள் இவ்வுலகை விட்டு நீங்கிய முதலாம் வருட நிறைவு தினம் 18-7-60 திங்கட்கிழமை பூர்த்தியாகிறது. அன்று தினம் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காகத் திவ்விய பூசைப்பலி நிறைவேற்றப்படும். ஆகவே, இதைக் கண்ணுறும் வணக்கத்துக்குரிய குருப்பிரசாதிகளே! சங்கைக்குரிய கன்னியாஸ்திரிமார்களே! மற்றும் சகோதர சகோதரிகளே! இவருடைய ஆன்மா சாந்தியடைய இறைவனிடம் மன்றாடும்படி தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இரக்கமுள்ள யேசுவே! இவருக்கு முடிவில்லாத காலத்தின் பேரின்ப சுகத்தைக் கட்டளையிட்டருளும். நித்திய காலத்தின் பிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக்கடவது. சமாதானத்தில் இளைப்பாறுவாராக, ஆமென்.

இத்தினத்தில் (18-7-60 திங்கட்கிழமை) யாழ்நகர் அர்ச். கொஞ்சேஞ்சி மாதா ஆசனக்கோவிலில் காலை 5¼ மணிக்கு ஒரு துக்கப் பூசை நிறைவேறும். இதைக் கண்ணுறுபவர்கள் இவருக்காக வேண்டிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவரைப் பிரிந்து துயருறும்

நேச மனைவி :
செ. பிரகாசியம்மா

அருமை மகள் :
செ. மேரி பெர்னதேத்தம்மா

காவற்குளி, கைதடி.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 503**

யாழ்ப்பாணம்
உரும்பிராய் கிழக்கு
1. வல்லிபுரம் அப்பாத்துரையும்
2. பெண் தங்கரெத்தினமும்
— வழக்காளிகள்.

எதிராக
யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு
1. கணபதிப்பிள்ளை செல்லையாவும்
2. பெண் நல்லம்மாவும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 503-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1960-ம்ஆண்டு புரட்டாதிமீ 24-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,996-72-உம், 13-9-55 தொடக்கம், 9-11-55 வரைக்கும் ரூபா2,000-க்கு 7வீத வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 201ரூபா 75சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் நல்லூர்க்கோயிற்பற்று கொக்குவில்இறை "நினைத்தது முடித்தான்" பர. நில. இலா. 3½-யும், வீடும், பனைமரங்களும், செய்பயிர், வான்பயிர்களும், கிழக்கெல்லையில் இருக்கும்கிணற்றில் பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும், இன்னும் வடக்கெல்லையால் றோட்டுக்குச்செல்லும் பாதைஉரித்தும். இதற்கு எல்லை: கிழக்கு — ஆறுமுகம் வைத்திலிங்கத்துக்குரிய ஆதனம். வடக்கு — செல்லையாவின் ஆதனம். மேற்கு — ஆறுமுகம் தம்பையாவுக்கும், பங்காளருக்கும், மறுபேருக்கும் உரியஆதனம். தெற்கு — சந்திரசேகரம் பெண் செல்லம்மாவின் ஆதனம். இது அடங்கலும்.

**அ. ஜெகநாதன்,**
கோமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 6, 2-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

## தேவை

அச்சகம் சம்பந்தமான சகலவேலைகளிலும் திறமைவாய்ந்த வேலையாட்கள் தேவை. ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் கையெழுத்துக் கொப்பிகள் வாசித்து அச்சடுக்குபவர் விசேட கவனிப்புக் குரியவராவர். பின்வரும் விலாசத்திற்கு நற்சாட்சிப் பத்திரங்களுடன் மனுச்செய்க.

மனேஜர்,
அ. இ மி. அச்சகம்,
மானிப்பாய்.



## 1-ம் வருட மரண ஞாபகம்

"பிரமாணிக்கமுள்ள நல்ல ஊழியனே உன் ஆண்டவருடைய சந்தோஷத்தில் பிரவேசிப்பாயாக."

**திருவாளர்**
**லாசரஸ் ஜோண் டெமர்சின்**
(Lighter Superviser P. C. C.)

**பிறப்பு: 27—3—1933**
**இறப்பு: 23—7—1959**

**செபம்**

கருணைக்கடலாகிய உலக சிருஷ்டிகரும் இரட்சகருமான சருவேசுராசுவாமி மனுஷரின் பராமுகத்தால் உத்தரிக்கிற ஸ்தலத்தில் கைவிடப்பட்டு வருந்தும் உமது அடியார்களின் பாவங்களை மன்னித்து, அவர்களுக்காக நாங்கள் செய்யும் பரிகாரத்தைக் கையேற்று அவர்கள் ஆசிக்கும் இளைப்பாற்றியைத் தந்தருளும். பூலோக சீவியத்தை விட்டுப் பிரிந்த உமது உத்தம அடியான்

லாசரஸ் ஜோண் டெமர்சின்
யேசுவின் மகாபரிசுத்த இருதயம்
நேசிக்கப்படுவதாக.

(பர. பிரி. திரி.)

23-6-60 சனிக்கிழமை காலை 7 மணிக்கு சந்தலூசியா தேவாலயத்தில் துக்கப் பாடற்பூசை பாடப்படும்.

நேச மகனை இழந்து துயருறும்
தகப்பன் P. லாசர்
தாய் லாசரஸ் மேரி

நேச தமயனை இழந்து துயருறும்
சகோதரர்கள்
L. திரேசா மார்த்தா
L. ரெஜினு ஜோசப்பின்
L. ஜெஸ்டினு
L. போல் செல்வராஜா
L. பிரிஜெட்
L. அல்பிரட்
L. மேரி மெட்டில்டா
L. ஜேம்ஸ்
மைத்துனர் சேவியர்பிள்ளை

**R. I. P.**

## நன்றித் துதி

பரிசுத்த சதாசகாயமாதாவே! எனது சகோதரி சென்ற ஆறுமாதகாலமாக மிகவும் சகிக்கவரியநோய்வாய்ப்பட்டுஎவ்வித சிகிச்சைக்கும் குணமுறாதிருந்தா. இறுதியில் உம்மிடம் சரணடைந்து நம்பிக்கையுடன் மன்றாடினேன். உமது இரக்கத்தால் அவ இப்போது நல்ல பூரண சுகமடைந்துள்ளா. நன்றித் துதியாக இதைப் பிரசுரிக்கின்றேன். உம்முடைய நாமம் என்றும் புகழப்படுவதாக.

உமது அடியாள்
M. J. A.

யாழ்ப்பாணம்.
6-7-60.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 599 T.**

சுளிபுரம்
காலஞ்சென்ற
வைர்முத்து நாகலிங்கத்தின்
ஆதனத்தின் உரிமைத்தத்துவகாரி.
சுளிபுரம்
வைரமுத்து நாகலிங்கம்
கைம்பெண் சாரதாம்பாள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 599T இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1960-ம் ஆண்டு ஆவணிமாதம் 20-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானை கோயிற்பற்று, சுளிபுரம்இறை "மங்கனஒலை" பர. நில. இலா. மூன்றும், (ப நி. இ. 3.) வீடும் எல்லை: கிழக்கு — சுப்பர் வேலுப்பிள்ளைக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனம். வடக்கு — ஒழுங்கைமுகப்பும், ஒழுங்கையும், தனுவார் மாரிமுத்துவின் ஆதனமும். மேற்கு — வேலர் கைம்பெண் கந்தரின் ஆதனம். தெற்கு — ஒழுங்கை. இதில் சொரியலாய் அரைவாசி.

**அ. ஜெகநாதன்,**
கோமிஷனரும், விலைமதிப்பாளரும்,
நம். 6, 2-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

**இல. M. B. 2708**

மண்டைதீவு
1. சின்னத்தம்பி கந்தையாவும்
2. மனைவி சின்னம்மாவும்.
— வழக்காளிகள்.

எதிராக, மண்டைதீவு
1. சின்னத்தம்பி வீரகத்தியும்
2. மனைவி பொன்னுவும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2708-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1960-ம்ஆண்டு ஆகஸ்ட்டுமீ 13-ந்திகதி (13-8-60) சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 901-உம், மேலும் 700 ரூபாவுக்கு 17-2-59 திகதி தொடக்கம், 30-6-59 திகதி வரைக்கும் வருடமொன்றுக்குப் 10வீத வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரைக்கும் வருடமொன்றுக்கு 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 177ரூபா 15சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லப்பிட்டிக் கோயிற்பற்று மண்டைதீவுஇறை, "நொச்சிதோட்டம்" நிலப்பரப்பு 10, குளிகள் 6¾, கிணறும், பனைகளும், தென்னைகளும். எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு — சேர்ச்மிசனுக்குரிய ஆதனம். மேற்கு — முடிக்குரிய ஆதனம். தெற்கு — குழந்தையர் விநாசித்தம்பிக்குரிய ஆதனம். யாழ்ப்பாணம் பதிவு இல. C 235/28.

**வி. செ. குட்டிப்பிள்ளை,**
கொமிஷனர்.

643, காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை, 25-6-60.

**"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."**

## நன்றித் துதி

பரிசுத்த சதாசகாயமாதாவின் அருளாலும், தேவதாயாரின் கிருபையாலும், திருஇருதயநாதரின் கருணையாலும் யான் கேட்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். இதை நேர்த்தியின்படி பூர்த்தி செய்கிறேன்.

ஊழியன்.


## கிளை ஆபீஸ்
## முறிவு, நோவுகளுக்குச் சிறந்த சிகிச்சை

ஒட்டகப்புலம், வைத்தியர்
**ஏ. எம். பொன்னையா சமத்தர்,**
எல். ஐ. எம். மதராஸ்.
வைத்திய நிலையம்
**ஏ. எம். பி. எஸ்**
**மருந்துச்சாலை,**
● 23/2, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

பிறஇடங்களுக்கு
நோவு, முறிவுகளுக்காகிய
மருந்துகள், எண்ணெய்கள்
தபால்மூலம் அனுப்பப்படும்.
● ஞாயிற்றுக்கிழமைதவிர
மற்றும்நாட்களில் திறந்திருக்கும்.


## பயங்கர மோட்டர் லொறிவிபத்து

பாடசாலைமாணவர்களும், ஆசிரியர்களுமாக 45 பேர் உல்லாசசுற்றுப்பிரயாணஞ் செய்துகொண்டிருந்த மோட்டர் லொறிஒன்று கடுகண்ணாவைக்கும், மாவனெல்லைக்குமிடையே பாதையை விலகிக் கீழேமலைச்சாரலில் சரிந்துஉருளத்தொடங்கிச் சுமார் 500 அடிக்குக் கீழேசென்றதும் மரங்களில்சிக்குண்டு தரிக்கலாயிற்று. இந்த விபத்தில் பத்துப்பேர் அந்த இடத்திலேயே மரணமடைந்தனர். அநேகமாக எல்லோருமே காயமடைந்தனர். ஏறக்குறைய 28 பேர் படுகாயமுற்றமையால் கண்டிஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்.

## பண்டாரநாயகா கொலைவழக்கு

கொழும்புப் பிரதமமஜிஸ்றேற் நீதிஸ்தலத்திலே பண்டாரநாயகா கொலைவழக்குவிசாரணை 118-வது தினமாகச் சென்ற திங்கட்கிழமை தொடர்ந்து நடைபெற்றது. அன்று தினம் 185-வது சாட்சியாகச் செல்வி ரூபா பெர்னாண்டோ விசாரணைசெய்யப்பெற்றார். இவர் மத்தியதந்திக்கந்தோரிலே தொலைபேசிப்பெண்களின் மேற்பார்வையாளர்.

## அரசாங்கஊழியருக்கு எச்சரிக்கை

அரசாங்கஊழியர்கள் எந்தவிதமான அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாதென்று சுகாதார, கல்வி, உள்நாட்டுமந்திரிகள் அவர்களை எச்சரித்திருக்கிறார்கள். அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களுக்காக முன்சொன்ன மூன்றுபகுதிகளிலுமுள்ள அரசாங்கஊழியர்கள் பிரசித்தமாக வாக்குகள்சேகரித்து வருகிறார்கள்என்பனவாகச் செய்யப்பட்ட முறையீடுகளிலிருந்தே இந்தஎச்சரிக்கை பிறக்கலாயிற்று.

● வடக்கிலிருந்து—அதாவது செஞ்சீனவிலிருந்து இனி வரக்கூடிய எந்த அபாயத்தையும் தடுத்துச் சமாளிக்கப் போதிய பலம்வாய்ந்த இராணுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டதாயும், லடாக்பகுதிமக்கள் இனிப்பயமின்றியே வாழலாமென்றும் பிரதமர்நேரு தெரிவித்திருக்கின்றார்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 14-1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org